

செ.யோகநாதன்

T. 2155

சண்முகம்
பாலசுந்தரம்
கண்டுக்குளி

S. B. SUNDARAM
CROSSETTE LANE
GUNDIKULI
JAFFNA

செ. யோகநாதன்

# அரசு

SOUTH ASIAN BOOKS
Rs.........
Colombo 11

சத்யபாரதி பதிப்பகம்

அன்பு, நேர்மை, படைப்பாற்றல்
அமைந்த
எழுத்தாளர் விட்டல்ராவ் அவர்களுக்கு.

அட்டை வடிவமைப்பு : ஓவியர், பாண்டியன்

விற்பனை உரிமை :

**காந்தளகம்**

4 முதல் மாடி, ரகிசா கட்டிடம்,
834, அண்ணாசாலை, சென்னை—600 002.

- 'அரசு' — ஒரு நாவல் — செ. யோகநாதன்
- உரிமை: ஜெயபாரதி யோகநாதன்
- சத்யபாரதி பதிப்பகம் சென்னை—600024
- முதற்பதிப்பு 14-4-1993
- அச்சு: சித்ரா பிரிண்டோ கிராபி சென்னை—14
- பக்கங்கள் : 180

விலை : பன்னிரெண்டு ரூபாய்

யோகநாதன் கதைகள். யோகநாதன் கதைகள். யோகநா

"சிறுகதை, நாவல், குறுநாவல், கட்டுரை,
கலைவிமர்சனம், குழந்தை இலக்கியம்
முதலிய பல இலக்கியப் பிரிவுகளிலும்
தனது எழுத்தாற்றலையும் ஆழ்ந்த அனுபவ
ஞானத்தையும் வெளிப்படுத்திவருபவர்
நண்பர் செ. யோகநாதன்..."

—வல்லிக்கண்ணன்.

"...தங்கள் கதைகளின் விமர்சன யதார்த்தப்
பண்பு என்னை வெகுவாகக் கவர்ந்தது.
இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களின்
மன உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்ற எழுத்
தாளர்களில், நீங்கள் தனித்துவம் பெற்றவர்
என்பது என் எண்ணம். அதே வேளையில்
தங்களின் நடை எளிமையும் என்னைக்
கவர்கிறது. இதனாலேயே ருஷ்ய மொழியில்
நான் உங்களை அறிமுகம் செய்கின்றேன்."

—விக்தர் ஃபூர்னிகா.
(சோவியத் தமிழறிஞர்)

"....செ. யோகநாதன் ஈழத்தமிழ்
எழுத்தாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்
கூடிய ஒருவர். இவரது படைப்புகள்
கருத்து வலிமையும், கலையழகும் ஒன்று
சேரப் பெற்றவை."

—சுபமங்களா

"...யோகநாதனின் கதைகள் வாழ்வின்
யதார்த்தத்தை சித்திரிக்கிற வேளையிலேயே
அதன் உள்ளடக்க வலுவினையும் பெற்றிருக்கின்றன.
கதைகளின் கலையழகு
வெகு இயல்பாகவே உள்ளடக்கத்தோடு
ஒட்டி நிற்பதற்கு, எழுத்தாளனின்
சிந்தனைத் தெளிவு, பார்வை என்பனவே
காரணமென்பர் மேனாட்டு விமர்சகர்.
யோகநாதனின் கதைகள் இத்தகைய
அம்சங்களைப் பூரணமாகப் பெற்றிருக்கின்றன
என்று துணிந்து கூறலாம்....
இதன் காரணமாகவே அறுபதுகளிலிருந்து
எழுதத் தொடங்கிய யோகநாதனின் கதைகள்,
இன்றைய இலங்கைச் சிறுகதைகளில்
விதந்து கூறத்தக்க சிறப்பினுக்கு உரியவையாயுள்ளன."

—பேராசிரியர் க. கைலாசபதி.

"...இவையனைத்திலும் சமூக மாற்றங்களின் வரலாற்று
ரீதியான நியதியை உணர்ந்திருக்கும் தன்மையைக்
காண்கின்றேன். இலங்கையின் சமுதாய வளர்ச்சியில்
தமிழர்களின் சமுதாயப் பிரிவில் ஏற்படும் மாறுதல்களை
யோகநாதன் கூர்மையாகக் காண்கிறார்.
....இலக்கியத்தைச் சமுதாய ஆய்வான கலைப்
படைப்பாகச் செய்து வழங்குகிற யோகநாதன் சிறு
கதைகளுக்கு, நிகழ்காலத்தை மாற்றுகிற ஆற்றலும்
வருங்காலத்தை உருவாக்குகிற சக்தியும் உண்டு..."

—பேராசிரியர் நா. வானமாமலை.

திரும்புகின்ற திசை யாவிலுமே அடையாளத்தையே காண்பிக்காமல் வானம் கருமையாய் மண்டிக் கிடந்தது. இரவானாற் போன்ற கருமை. கொஞ்சங்கூட காற்றின் அசைவில்லை. இதோ இப்போதே இந்த இருள் கனத்த வானத்திலிருந்து மழை கொட்டப் போகின்றது என ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த மயிலர் எண்ணிக் கொள்கிறார்.

குளத்தங்கரை அருகே சடை விரித்து நிற்கின்ற அரச மரத்தின் கீழே நிற்கிற மயிலர், கோவணத்தை அவிழ்த்துக் கட்டிக்கொண்டே, அரச மரத்தின் வேரருகே குறுக்காய் விழுந்து கிடக்கின்ற பாலைக்குற்றியில் உட்கார்ந்து கொள்கிறார். அரச மரத்தின் இடது புறத்திலே குளமும் வலப்பக்கத்திலே — அரச மரத்திற்கு கொஞ்சம் இடைவெளிவிட்டு வயற்பரப்பும் பரந்திருக்கின்றன. வானம் பார்த்த வயல்வெளி. அதன் பின்புறத்திலேதான் நூற்றி முப்பத்தியாறு குடும்பங்கள் வாழ்கின்ற பொய்கையூர்க் கிராமம். அரச மரத்தைத் தாண்டி கிராமத்திற்குள் போவதற்கு இடையே கொஞ்சத் தூரம் பரட்டைக்காடு— ஈச்சம்பற்றைகள். கொய்யா. வடலிப்பனைகள். நாயுருவி...

அரசு

பிறகு மெது மெதுவான சமதரையிலே நிறையும் புல்வெளிகள், மந்தைகள்.

மயிலர், அந்தப் பரட்டைக் காட்டினூடே கிராமத்தைப் பார்க்கிறார். அவரின் கண்வழியே வகிடு எடுத்தாற் போலத் தெரிகின்ற வண்டிப்பாதை. அதுவேதான் ஒற்றையடிப் பாதையும், ஊருக்குள்ளே செல்கின்ற ஒரே பாதையும். மயிலர் அறிந்த நாளில் இருந்து—அது எத்தனை வருஷங்களிருக்கும்? மூன்றுக்கு மேற்பட்ட தலைமுறை காலமாயிருக்கலாம் — அந்த ஒற்றையடிப் பாதை இதேபோல, இதே வடிவத்திலேயே சோம்பலாகப் படுத்திருக்கின்றது. மயிலரைப் போலவேதான் இந்த அரசமரமும் அந்த ஒற்றையடிப் பாதையையே பார்த்துக் களைத்திருக்கும்.

மெல்லவே குளிரினை அள்ளிக்கொண்டு உடம்பினை அளைகிறாற்போல வருகிறது காற்று. அவசரமில்லாமல் வந்து அரசமிலைகளைச் சீண்டிச் சிலிர்க்க வைக்கிறது. குளக்கரையில் நின்ற நாரை ஜிவ்வென்று சீரான வேகத்திலே உயர்ந்து பறக்கிறது. இரண்டொரு தவளைகளின் "டொடக் டொடக்... டொடக் டொடக்..."

"இப்ப நல்ல மழை அள்ளி கொட்டப் போகுது...."

தன் முதுகில் உட்கார்ந்திருந்த அரசமிலைச் சருகை எடுத்து முன்னே போட்டவாறே முணுமுணுக்கின்றார் மயிலர்.

அரசமரத்தை நிமிர்ந்து பார்க்கையில், உடைந்து முறிந்து சரிந்தாற் போலக் கிடக்கின்ற பெரிய கிளை ஒன்று பார்வையில் படுகின்றது. இலைகள் காய்ந்ததும், காயாமலும், பழுத்தும் தெரிகின்றன. அந்தக் கிளையிலே இன்னும் நிறையவே கிளைத்திருக்கும் சிறு கிளைக் குஞ்சுகள். மயிலருக்கு ஒடிந்து கிடந்த அந்தக் கிளையைப் பார்க்கையில் லேசான இரக்கம்கூட உண்டாயிற்று. ஒரு கிழவனைச் சேதப்படுத்தினாற் போல இந்த அரசமரத்தையும் தான்

சேதப்படுத்தி விட்டேனோ என மனம் நினைத்தது. மறு கணமே சிரிப்பும் வந்தது.

"என்னைவிடக் கிழவன் அப்பா நீ! கடைசியிலை கிழவனோடை கிழவன் சண்டை போட்டு விட்டேன். ஆனால் நன்மைக்காகத்தான் இதைச் செய்திருக்கிறேன்.... நிச்சயமாக இனி வாற வெய்யில், மழை, புயலை நாங்க ரெண்டு பேருமே தாங்கிக் கொள்ள முடியாது... வயது போன காலத்திலை ஏன் அப்பா மற்றவைக்கெல்லாம் தொந்தரவு கொடுக்க வேணும்?..."

அரசமரத்தின் முதிர்ந்த அடிமரத்தை மயிலர் தட்டி விட்டு எழுந்து கொஞ்சம் சுற்றிப் போனார். உடலெல்லாம் சந்தனப் பூச்சாலும், வாடிய பூக்களாலும் மூடப் பட்டிருக்கின்ற பிள்ளையார் சௌகரியமாக அரசமரத் தோடு ஒட்டிய கற்பீடத்தில் உட்கார்ந்திருந்தார். அவரின் கீழே குடங்கிக் கொண்டு கிடக்கின்ற இரு வெள்ளை வெளாரென்ற ஆட்டுக்குட்டிகள். ஓசை கேட்டதும் ஒன்று சட்டென்று துள்ளி மற்றப் பக்கமாய் ஓடிற்று.

இந்த அரசமரத்தின் கீழேயிருக்கின்ற பிள்ளையாருக்கு அந்தக் குளத்தங்கரையின் மறுகரையிலே, செவ்வரளிகளுக்கு நடுவே மயிலரும், கிராமத்தவர்களும் புதியதாக தங்கிடம் தீர்மானித்து விட்டார்கள். சிறியதாக சீமெந்தாலான பீடமும் அதன் மேலே கிடுகு வேய்ந்ததாய் சிறு இருப்பிடமும். நல்ல நாளாக ஒரு நாள், பிள்ளையார் சதுர்த்தி வர முன்னர் அதைச் செய்து விட வேண்டும். அண்ணாவி சின்னத்தம்பி இதற்காகவே முழு நேரமும் அலைந்து கொண்டிருக்கிறான். உடுக்கும் கையுமாக இதே வேலைதான். பிள்ளையார் மேலே சின்ன வயதிலிருந்தே இருந்து வருகின்ற அதிசயமான, இன்னும் சொன்னால் வெறித்தனமான பக்தி.

தும்பிகள், வெறிக்காற்றில் அங்குமிங்குமாய் சிதறும் இலைகள் போன்று அவ்விடமெங்கும் மொய்த்துப்பறந்தன. 'ட்ட்டட்டொறாக்' என்றது தவளையொன்று, யாரையோ

அதட்டிக் கூப்பிடுகிறாற்போல. குளிர்காற்று அவசரமாக வீசி வந்து உடலை நடுங்க வைத்தது.

சடசடவென்று மழைத் துளிகள் விழுகின்றன. குளத்திலே சின்னச் சின்ன வட்டங்கள் மழைத் துளிகளால் பூத்துப் பெருகுகின்றன. பார்த்துக் கொண்டு நிற்கையிலே சோனா வாரியாகக் கொட்டி, அரசமர இலைகளுக்கூடாக அவசர அவசரமாக கீழே இறங்குகின்ற மழை நீர் மெது மெதுவாய் வெள்ளமாகச் சிலிர்த்துக் கொண்டு உருள்கையிலே மயிலர் பிள்ளையாரின் பீடத்தோடு ஒன்றிக் கொள்கிறார்.

இந்த அரசமரம் பொய்கையூர்க் கிராமத்திலுள்ள வயது முதிர்ந்த மரங்களிலே ஒன்று. சரியாகக் குளக்கரை முடிவிலிருந்து எல்லையிட்டுத் தொடங்குகிற இன்னொரு வயற்காணியிலேதான் இந்தமரம் உள்ளடங்கி நிற்கிறதென தம்பர், மயிலருக்கு சொல்லியிருக்கின்றார். தம்பரின் வயற்காணிக்குள்ளாகவே போய் வந்த கிராம மக்களின் நன்மைக்காக அவரே அரசமரத்தோடு சார்ந்து கொஞ்ச நிலப் பரப்பையும் விட்டுக் கொடுத்து விட்டார். இதனைத் தனது ஒரே மகனான மயில்வாகனம் என்ற மயிலருக்கு அவர் தனது அந்திம காலத்திலே சொன்ன போது மயிலருக்கு வியப்பாகவும், சந்தோஷமாயுமிருந்தது.

அந்த அரசமரமும் மயிலருக்கு நீண்ட நாட்களாகவே பழகிப் போனதொரு முரட்டு மனிஷனாகிவிட்டது.

கிராமத்திலே இருந்து வரும் ஒற்றையடிப்பாதை இந்த அரசமரத்தடி வரைக்கும் தொட்டு, பின்னர் அதிலிருந்து கொஞ்சத் தூரம் வரை தொடர்ந்து போய் பிரதான வீதியோடு முற்றுப்புள்ளி இட்டுக் கொள்கிறது. இந்த வீதியிலிருந்துதான் முப்பது மைல்கள் தள்ளியுள்ள பட்டணத்திற்கு பஸ்ஸில் செல்ல முடியும். காலை எட்டு மணிக்கும், மத்தியானம் பன்னிரெண்டு மணிக்குமான இரண்டு வேளை பஸ்கள் மட்டும் ஓடுகின்றன.

தபாற்காரர் எப்போதாவது ஒரு நாளைக்குத் தான் கிராமப் பக்கமாக வருவார். அதுவும் அரசமரத்தடி வரையிலேதான். அரசமரத்தடியில் யாராவது ஒரு கிராமவாசி, அனேகமாக மயிலர்தான் நிற்பார். தபாற்காரர் வாயிலே வெற்றிலையை அதக்கிக் கொண்டே மயிலரிடம் கடிதங்களைக் கொடுப்பார். ஒரு முறை. மயிலர் தன்னால் போக முடியாதென்று சொன்னதும் தபாற்காரர், வெற்றிலைச் சாறு சிதறிப் பறக்கச் சிரித்துக் கொண்டார். பின்னர் கையிலே வைத்திருந்த மூன்று கடிதங்களையும் சுக்கு நூறாகக் கிழித்துக் குளத்துப் பக்கமாக வீசினார். மயிலருக்கு நெஞ்சினுள்ளே ஊசி கொண்டு குத்தினாற்போல வலித்தது. தபாற்காரர் மீசையை முறுக்கிக் கொண்டார். இலேசாக கள்ளின் மணம் வார்த்தைகளோடு தெறித்தது.

''மயிலு.... இதை இண்டைக்கு மட்டுந்தான் நான் செய்வனென்டு நீ நினைக்காதை. ஒவ்வொரு நாளும் இனி இதைத்தான் நான் செய்வேன்... மந்திரிமாரே என்னட்டை கைகட்டிக் கொணடு நிண்டுதான் தபால் வாங்கிறவை. இது உனக்குத் தெரியுமா? சிலவேளை இதை நீ நம்பாமல் இருக்கலாம்... ஐ டோன்ற் கியர்... ஆனால் ஒண்டு மட்டும் நான் சொல்லுறன்.... இந்த அரசமரத்துப் பக்கமாய் இடறிக் கொண்டு இந்த மணல் நீளமெல்லாம் இழுபட்டு என்னாலை தபால் குடுக்க முடியாது... இந்த அரசமரத்தை வெட்டி, இந்த வழியைப் பெருப்பிச்சு றோட்டாக்கினதுக்குப் பிறகு தான், இந்த ஐயாத்துரை—'போஸ்ட்மன் ஐயாத்துரை' உங்கடை ஊருக்குள்ளை வந்து வீடு வீடாக தபால் கொடுப்பான்... தெரிஞ்சுதா மயிலு?''

எப்போதும் சிவந்திருக்கின்ற கண்களும், முறுக்கு மீசையும், கரகரத்த குரலுமுடைய ஐயாத்துரையின் அதட்டலுக்கு மயிலர் பயபக்தியாகத் தலை அசைத்தார். இதன் பின்னர் இரண்டு வாரங்களாக ஐயாத்துரை அந்தப் பக்கமே வரவில்லை. மயிலர், மனதில் குற்ற உணர்வோடு பல நாட்களாக ஐயாத்துரையை அரசமரத்தடியிலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவனுடைய தலைக் கறுப்பை

யும் காணவில்லை. வெள்ளிக்கிழமை திடீரென்று ஜீப் வண்டியொன்று அரசமரத்தடிப் பக்கமாக வந்து நின்ற போது மயிலருக்கு நெஞ்சு திக்கித்தது. தொண்டைக்குள் என்னவோ அடைத்து, வயிறு குளிர்ந்தது. ஐயாத்துரை தன்னைப்பற்றி ஏதாவது அரசாங்கத்துக்கு சொல்லி அவர்கள் தன்னைக் கூப்பிட வந்துவிட்டார்களோ என மனதினுள் பயம் அடித்துக் கொண்டது. தனக்கு அருகாக உள்ள பிள்ளையாரை வேண்டிக் கொண்டே வியர்வையும், நடுக்கமுமாய் நின்றார். தலையில் கட்டியிருந்த துண்டை உருவி இடுப்பிலே கட்டிக் கொண்டார். அவர்களுக்கு என்ன பதிலைச்சொல்லலாம் என்று நினைத்தபோதே உடல் நடுங்கி கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அனிச்சை யாகவே கண்களைத் துடைத்தவாறு பிள்ளையாரை மீண்டும் மன்றாடிக் கொண்டார்.

ஜீப்பிலிருந்து இரண்டு பேர் இறங்கி மயிலரை நோக்கி நடந்து வந்தனர். அவர்களைப் பார்க்கவே மயிலருக்கு வயிற்றைக் கலக்கிற்று. காற்சட்டை, ஷேர்ட், கறுப்புக் கண்ணாடி, பொச பொசவென்ற பேச்சு.

எதிரே வந்ததும் அவர்களைப் பார்த்துக் கும்பிட்டார் மயிலர்.

''இந்த ஊருக்குள்ளை ஜீப்பிலை போறதாயிருந்தால் எந்தப் பக்கமாகப் போக வேணும்?''

உயரமான ஆளின் அந்தக் கேள்வி மயிலரை ஆறுதல் படுத்திற்று. வேர்வையை வேட்டித் தலைப்பால் துடைத்த வாறே அவனைப் பயபக்தியாகப் பார்த்தார்.

''ஊருக்குள்ளை போறதுக்கும் வாறதுக்கும் ஒரேயொரு வழிதான் ஐயா இருக்குது. ஆனால் அதுவும் நடந்துதான் ஐயா போகவேணும்.... எங்கை ஐயா நீங்க போக வேணும்? சொல்லுங்க கூட்டிக் கொண்டு போகிறேன்...''

உயர்ந்தவனின் முகத்திலே எரிச்சல் பொங்கிற்று. கைகளை உதறிக் கொண்டான். மற்றவன் உருளையாய்,

சிவபபாய் இருந்தான். கறுப்புக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக் கொண்டே மெல்லிய குரலிலே மயிலரைப் பார்த்துக் கேட்டான்:

"பக்கத்திலை எங்கையாவது புதுக் கள்ளுக் கிடைக்குமோ?''

அவனது குரலில் அதட்டல் தொனித்தது.

மயிலருக்கு மனதுள் என்னவோ குறுகுறுத்தது. கொஞ்ச நேரம் பேசாமல் நின்றார்.

''நாங்க காசு தருவம். கலப்பில்லாத நல்ல கள்ளாக, புளிப்பில்லாம இருக்க வேணும்... யாருக்குந் தெரியாமல் வாங்கிக் கொண்டு வந்து தரவேணும்...'

உயர்ந்தவனுக்கு சினம் அதிகரித்ததை முகம் தெளிவாகவே காட்டிற்று. ஒன்றும் பேசாமல் மயிலரைப் பார்த்தான்.

''இப்ப எல்லாம் கள்ளு எடுக்கவே முடியாதையா...''

உருளையனுக்கு எல்லாமே சப்பென்று போனாற் போல முகம் மாறிப் போயிற்று.

''இப்ப இந்த 'ஸ்ரட்டிக்ஸ்' என்ன மாதிரி எடுக்கிறது? குலம், இங்கையிருந்து இவ்வளவு தூரத்திற்கு எப்படி நடந்து போறது? பெரிய உபத்திரவமான இடத்துக்கு வந்திருக்கிறம்.... என்ன கிழவரே, இந்த நேரம் ஊரிலை உள்ளவங்கள் வீட்டிலேயே இருப்பான்களா?....''

''முக்கால்வாசிப்பேர் இருப்பான்கள் ஐயா... பொம்பிளையள் ஆரும் வெளியாலை போறதில்லை...''

உருளையன் ''அப்படியா?'' என்று விட்டு குளப் பக்கமாகத் திரும்பினான்: ''குலம், ஒரு விஷயம் செய்வமா? இந்தக் கிழவனிட்டையே விபரத்தைக் கேட்டு எழுதிக் கொண்டு போய் விடுவமா? இதையெல்லாம் யார் வந்து

'செக்' பண்ணப் போறாங்கள்? கிழவன், உனக்கு இந்த ஊரிலை இருக்கிற சனத்தொகை விபரம் தெரியுமா?"

மயிலர் நரைத்த தலையைச் சொறிந்து கொண்டார். பூனைக் கண்களில் கேள்வி நிறைய அவனைப் பார்த்தார். மீண்டும் தலையைச் சொறிந்தார்.

"ஐயா, கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கோ?...."

மயிலர் தயக்கமாகக்கேட்டார். குரலில் தயவும் பணிவும் இறுகியிருந்தன.

''ஒவ்வொரு வீட்டிலும் எவ்வளவு ஆட்கள் இருக் கிறார்கள் என்று உன்னாலை சொல்ல முடியும்... இந்தா இந்தக் காசை வைச்சுக் கொள்.... யோசிச்சு நிதானமாகச் சொல்ல வேணும். இது கவுண்மெந்து வேலை....''

மயிலர் தயக்கத்தோடு பின்னே போனார். பிறகு அவர் கள் வற்புறுத்தவே பணத்தினை வாங்கிக் கொண்டார். மூவரும் அரச மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு, அந்தக் கிராமத்தின் சனத்தொகைக் கணக்கெடுப்பை தயாரித்துக் கொண்டிருந்தனர்.

சனத்தொகைக் கணக்கெடுப்பு முடிந்ததின் பின்னர் குலம் என்ற உயர்ந்த ஆள் அந்த அரசமரத்தையும், அதிலிருந்து தொடங்குகிற ஒற்றையடிப் பாதையையும் கொஞ்ச நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு தணிந்த குரலிலே சொன்னான்:

"இந்த அரசமரத்தை வெட்டித் தறித்தால் இந்த ஊரவன்களுக்கு எவ்வளவு நன்மை உண்டாகும்....? பெரிய ஒரு பாதையையே உண்டாக்கி விடலாம். வண்டிகளெல்லாம் தாராளமாகப் போய் வரும்.... நல்ல முன்னேற்றமும் ஏற்படும்.... இப்ப முற்றிலும் இருண்ட வாழ்க்கைக்குள்ளை தான் இந்தச் சனங்களினுடைய காலம் போய்க் கொண் டிருக்கும்.... ஏன் கிழவரே, நீங்களெல்லாம் சேர்ந்து இந்த

இடத்திலிருந்து நல்ல பாதையொன்று உண்டாக்க முடியாதா?''

சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான் குலம். மயிலர் யோசனையோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

மாலை முழுவதும் மயிலருக்கு இதுதான் யோசனை. கொஞ்சம் கள்ளும் குடித்திருந்தார். ஏதோ ஒரு ஆத்திரத்தோடு அன்றுதான் இந்த அரசமரத்தின் கிளையொன்றை அவர் வெட்டித் தறித்தார். தறிக்கும்போது தபாற்கார ஐயாத்துரையையும் நினைத்துக் கொண்டார். தனது ஊரையே வழி மறித்து நிற்கின்ற நந்தியாகவே அவருக்கு அந்த அரசமரம் தென்பட்டது. அரசமரத்தின் கிளையைக் கோடரியால் தறித்தாலும் அது தனித்து விழவில்லை. அரைவாசியில் தொங்கிக் கொண்டு நின்றது. இழுத்துப் பார்த்தார். கொஞ்சமும் அது கீழே அசையவில்லை....

மழை சோவென்று பெய்து கொண்டிருக்கிறது. ஒடிந்து குற்றுயிராய் தொங்குகின்ற அந்தக் கிளையையே மங்கிய தனது பூனைக் கண்களால் பார்த்தவாறு குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தார் மயிலர்.

## இரண்டு

சங்கரன் சுருட்டை வீசி எறிந்துவிட்டு பற்களை நெரும்பினான். பொய்கையூர், மழையினால் சளசளத்து வெள்ளம் மேலும் மேலும் ஏறிக்கொண்டிருக்கிறது. குடிசைகள் ஒவ்வொன்றும் தனித் தீவுகளாய் நீரினுள் மூழ்கியிருந்தன. பிரவகிக்கின்ற வெள்ளம்.... வெள்ளத்தில் மிதக்கிற மரஞ்செடிகள்.... பிராணிகள்...

வெள்ளத்தை வடியச் செய்வதற்காக பல இடங்களிலும் வாய்க்கால்கள் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசமரத்தடிப் பக்கமாக நிறைந்து பெருகுகிற வெள்ளம், குளத்தையும், வயல் மேடுகளையும் மறைத்து மூடி அப்படியே அசைவற்றுப் போய் நிற்கிறது. ஒரு பெரிய ஏரியினைப் போன்ற தோற்றத்தையே இப்போது பெற்றிருக்கிற அந்தப் பகுதியின் வெள்ளந்தான் முதலில் எங்காவது வழிந்தோட வேண்டும். ஆனால் அதை வழியவிடாமல் பூதாகரமாகத் தடுத்துக் கொண்டு இப்போது கொஞ்சம் சிலிர்த்துப் பூரித்தாற்போல நிற்கிறது அந்த அரசமரம். தோளை அகட்டிக் கொண்டு தலையையும் கைகளையும் விரித்துக் கொண்டு நிற்கிற சூரனைப் போல அந்த மரத்தை உணர்ந்தான் சங்கரன்.

அரசமரக் கொம்பொன்றிலே உட்கார்ந்திருக்கின்ற சங்கரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இந்தப் பகுதியிலுள்ள வெள்ளத்தைப் பார்த்து, வாய்க்கால் வெட்டி வருகிறேனென்று மண்வெட்டியோடு வந்தவன் இப்போது இந்த அரசமரக்கிளையிலே உட்கார்ந்திருக்கிறான். உடம்பெல்லாம் வெடவெடத்து விறைக்கின்றது. இனி சுருட்டும் பற்ற வைக்க முடியாது. தீப்பெட்டி ஈரத்தால் ஊறிக் கனத்தது, நைந்து போயிருந்தது.

கீழே பார்த்தால் வெள்ளம், குப்பைக்கூளங்களை அள்ளி நுரை சிதற விரைந்து கொண்டிருக்கிறது. சங்கரனின் பார்வை திடீரென்று வெள்ளத்தினிடையே குத்துண்டது. நன்றாக உற்றுப் பார்த்தான். இரண்டு கன்றுகளும், மாடும் வெள்ளத்திலே அள்ளுண்டு மிதந்து வந்து கொண்டிருந்தன. வயிறு உப்பிப் பருத்து, கண்கள் பிதுங்கி வெளியே விழுகிறாற் போல பயங்கரமாகக் காட்சியளித்தன அவை.

அவனுக்கு நெஞ்சிலே முரட்டுக்கரமொன்று ஓங்கி அறைந்தாற்போல வலித்தது. அடிவயிற்றைப் பிய்த்துக் கொண்டெழுந்தது பெருமூச்சு. அவனது நாற்பது வருஷ

காலத்து வாழ்விலே இது போன்ற வெள்ளத்தைக் கண்ட தில்லை. அதுவும் உயிர்களெல்லாம் வெள்ளத்திலே சிக்கி இப்படி மிதந்ததில்லை... அந்தப் பசுவும், கன்றுகளும் இப் போது ஒவ்வொரு திக்காகப் பிரிந்து வெள்ளத்தின் முது கிலே விரைந்து கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் யாருக்குச் சொந்தமானவையாக இருக்கும்? பசுபதியின் மாடு கன்றுகள் தான். பாவம் பசுபதி. அவனுக்குள்ள ஒரே சொத்து இவைகள் தான். இதை அறிந்தால் அவன் நிச்சய மாக நீண்ட நாட்களுக்கு சாப்பிடவே மாட்டான். விம்மி விம்மி அழுது கொண்டேயிருப்பான்...

இந்த அரசமரம், ஒற்றையடிப் பாதையைவிட உயர மான மேட்டிலே அமர்ந்திருக்கிறது. இதைச் சுற்றி யெழுந்த மணல் மேட்டையும், அரசமரத்தையும் நீக்கிக் கொஞ்சம் தரையை அமரச் செய்துவிட்டால் இப்படி யெல்லாம் வெள்ளம் வடியாமல் நிற்காது. மழை பெய்யப் பெய்ய அங்குமிங்குமாகச் சுற்றுப்புறங்களில் வழிந்து போய்விடும். இந்த அரசமரத்தினை வெட்டித்தறிக்க வேண்டுமென்று எத்தனையோ தரம் மயிலர் சொல்லியிருக் கிறார். அப்போதெல்லாம் யாருமே இதை அக்கறையாகக் கேட்டதில்லை. கேட்டிருந்தால் ஊரையே அள்ளிக்கொண்டு செல்கிற வெள்ளம் இப்படிக் கரைபுரண்டு ஓடிக்கொண்டே யிருக்க முடியாது. பெருவெள்ளம் சாதாரணமாக எப் போதோ வடிந்து போயிருக்கும்.

மயிலரை நினைக்கையிலே அவர் இன்னமும் பட்டணத் திலிருந்து திரும்பி வராதது பசுபதிக்கு மிகவும் கவலை யினை ஏற்படுத்திற்று. அவரும் பாவம், வீணாக வாழக் கொன்றிலே மாட்டுப்பட்டு, கிடைக்கின்ற பணம் யாவற் றையுமே செலவழித்துக் கொண்டிருப்பது எல்லோருக்குந் தான் ஊரிலே கவலையை ஏற்படுத்தினாலும், மயிலருடைய பக்கத்திலே இருக்கின்ற நியாயத்தை அவர்களால் மறுக்க முடியவில்லை.

மயிலர் நேர்மை தவறியதாக அந்த ஊரிலே உள்ள சின்னக்குழந்தை கூட சொல்லமாட்டாது. மற்றவருடைய துரும்பைத் தன்னும் எடுக்கவிரும்பாத மனிதர், இப்போது தன்னுடைய மாட்டுக் கன்றுக்காக உரிமை கேட்டு நீதி மன்றப் படிகளிலே ஏறி இறங்குவதும், மாட்டுக் கன்றின் பெறுமதியை விட அதிக பணத்தை வழக்கிற்காகச் செல வழித்துள்ளதும் பசுபதிக்கு மிகவும் கவலை.

மயிலர் இந்த மாட்டுக் கன்றினை மிகவும் பிரியமாகவே வளர்த்து வந்தார். பரம்பரை பரம்பரையாகவே அவரது வீட்டினில் வளர்ந்து வருகின்ற மாட்டின் கன்று அது. வெள்ளை வெளாரென்று பாலான நிறம். 'வெள்ளைப் பூ' என்று பேர் வைத்திருந்தார். தன்பேரைச் சொன்னாலே போதும் பிள்ளைபோல அவரருகே தாவியோடி வரும் அது. திடீரென ஒரு வெள்ளிக் கிழமை பின்னேரம் போல அந்த மாட்டுக் கன்று காணாமற் போயிற்று. மயிலர் இரவிரவாக அதனைத் தேடினார். மறுநாள் காலை, மாலை, மறுநாள் இப்படியே மூன்று தினங்களாகத் தேடிவிட்டு பாயிலே விழுந்து விட்டார் மயிலர்.

அன்று மாலையில் கதிரேசன் வந்து செய்தி சொன்னான்: "மயிலப்பு பொலிஸ்காரச் சுப்பையா வீட்டிலை உன்னுடைய வெள்ளை மாட்டுக் கண்டு பரிதாபமாகக்கத்திக் கொண்டு நின்றதை நான் இந்த ரெண்டு கண்ணாலுமே பார்த்தன்...."

"அப்பிடியோ மோனை?"

மயிலருக்கு மீண்டும் உற்சாகமானது முகத்திலும் உடலிலும் துளிர்த்தது. துள்ளி எழுந்தார். "பொலிஸ்கார வடுவா.... என்ரை கண்டைக் களவாகவா பிடிச்சு வைச் சிருக்கிறான். அயோக்கிய ராஸ்கல் என்ரை வெள்ளைப்பூ அங்கே என்ன பாடுபடுகுதோ பிள்ளையாரப்பா...."

சுப்பையா மீசையை முறுக்கிக் கொண்டு மயிலரை அதட்டினான்: ''என்ரை வீட்டுக்கு வாறதுக்கு உனக்கு எப்படியடா துணிச்சல் வந்தது? கள்ளப் பயலே, வேறு யாராவதாயிருந்தால் இப்ப உன்னை உடனையே 'றிமாண்ட்' பண்ணியிருப்பன். நீ ஒரு கிழட்டுப் பயலா யிருக்கிறாய்... ஒரு தட்டுத் தட்டினாலும் விழுந்து செத்துப் போய் விடுவாய்.... கிராமத்து நாய்களுக்கெல்லாம் ஒரு பொலிஸ்காரன் வீட்டுக்கு வந்து கேள்வி கேட்கிற அளவுக்கு காலம் மாறிப் போச்சுதா? ஓடடா, என்ரை கோபத்தைக் கிளறாமல் இங்கையிருந்து ஓடிவிடடா....''

அவனது கடுமையான குரல் மயிலரை அதிரப் பண்ணி விட்டது. எனினும் மனம் தளரவில்லை.

மயிலர் நரைத்த தலையினைச் சொறிந்தபடியே கொஞ்ச நேரம் நின்று யோசித்தார். தளர்ந்த தேகத்தினுள் ஒவ்வொரு அணுவிலும் கோபம் கொந்தளித்துக் கொண்டி ருந்தது. தனது குரலைக் கேட்டதுமே 'அம்பா...' என்று தாபம் சிதறக் கத்திய மாட்டுக் கன்றை தூர இருந்தே பார்த்தார். கண்களிலே கண்ணிர் துளிர்த்து, சுருக்கம் விழுந்த கன்னமெங்கும் வழிந்தது.

''இதைக் கடவுள் பொறுக்கமாட்டார் அப்பா... அந்தக் கண்டை அவிட்டு விடு... குழந்தையைப் போலை அது அழுகுது... உன்னாலை அதுக்கு சாப்பாடும் வைக்க முடியாது...அதை நான் என்னுடைய பிள்ளையைப் போலை வளர்த்துக்கொண்டு வாறன்...''

சுப்பையா அட்டகாசமாகச் சிரித்தான். பின்னர் முகத்திலே ஆத்திரத்தை ஏற்றிக்கொண்டு மீண்டும் உரத்த குரலிலே கத்தினான்:

''டேய்....கிழவா, இனிப் பேசினி என்றால் உன்னுடைய பிடறியை முறித்துப் போடுவன்...இது என்ரை மாட்டுக் கன்று என்று எத்தினை தரமடா உனக்கு நான் சொல்லு

அ—2

றது? இனி இதிலை நின்றால் உதைச்சுத்தான் கலைப்பன்....''

அவனது அசிங்கமான வார்த்தைகள் மயிலரை தடுமாறி மனம் நோகச் செய்தன, அவ்வளவு கீழ்த்தரமான வார்த்தைகள்.

மயிலர் அதற்குப் பின்னர் அங்கு நிற்க விரும்பவில்லை. வீட்டிற்கு வந்து படுத்துவிட்டார். இரண்டு நாளாக அனலான காய்ச்சல். மாட்டுக் கன்றைப் பற்றித்தான் இரவு பகலாக ஓயாத புலம்பல். அழுகை. குழறல். கெஞ்சுதல்கள்....

வைத்தியம் பார்க்க வந்த செல்லத்துரைதான் அந்தக் கிராமத்திலே ஒழுங்காகப் பத்திரிகைகள் படிக்கிறவர். உலக விஷயங்கள் தெரிந்தவர். அதிகமாகப் பேசமாட்டார். ஆனால் பேசினால் பேசினதுதான். இப்போது வீட்டிலே ரேடியோப் பெட்டியும் வாங்கி வைத்திருக்கிறார். மயிலருக்கு வருத்தம் என்று பசுபதி சொன்னதும் யோசித்துவிட்டு மயிலரை வீட்டுக்கே வந்து நாடி பிடித்துப் பார்த்தார்.

நிமிஷங்களிலேயே செல்லத்துரைக்கு எல்லா விஷயங்களும் தெரிந்துவிட்டன. கொஞ்சக் குளிகைகளை தேனோடு சேர்த்து மயிலரை நாளைக்கு மூன்று வேளை சாப்பிடச் சொன்னார். ஒன்றைப் பற்றியும் யோசித்துக் கவலைப்பட வேண்டாம் என்று கூறியவர் நிதானமாக மயிலரைப் பார்த்தார். பரிவோடு கூறினார்:

''மாட்டுக் கன்றைப் பற்றி ஒன்றும் யோசித்துக் கவலைப்படாமல் இருக்க வேணும், உடம்பு நல்லாய்ச் சுகம் வந்த பிறகு நாங்கள் ரெண்டு பேரும் பட்டணத்துக்குப் போவம். எனக்குத் தெரிஞ்ச ஒரு அப்புக்காத்தர் இருக்கிறார். அவரிட்டைச் சொல்லி கோர்ட்டிலை வழக்கு வைப்பம்.... கட்டாயம் இந்த மாட்டுக் கன்று திரும்பவும்

உமக்குத்தான் கிடைக்கும்.... அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்று சொல்லுறது ஒருநாளும் பொய்யாகிப் போறதில்லை...''

மயிலருக்கு கண்கள் கலங்கின. நாத் தளுதளுத்தது. கைகளைக் குவித்து மேலேயும், செல்லத்துரையையும் பார்த்துக் கும்பிட்டார். எழுந்திருக்க முயன்றவரை செல்லத்துரை ஆதரவோடு முதுகில் பிடித்து படுக்க வைத்தார். மயிலர் தளர்ந்து போயிருந்தார்.

இரு வாரங்களிலே கோர்ட்டில் பொலிஸ்காரருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. அது தொடர்கதையாகவே நீண்டு கொண்டிருந்தது. இன்று வழக்குத்தவணை ஆதலால் நேற்று மாலையே பட்டணத்துக்குப் போய் விட்டார் மயிலர். மயிலரை நினைத்து இப்போது மிகவும் பரிதாபப்பட்டுக் கொண்டான் சங்கரன்.

## மூன்று

மயிலர் மிகுந்த கவலையோடு ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். சென்ற வழக்குத் தவணையின்போது அவரது அட்வக்கேற் மிகவும் நம்பிக்கையளிக்கும் விதமாகக் கதைத்து அவரிடம் நூறு ரூபா பணமும் வாங்கிக் கொண்டு சுத்தமான தேனாக இரண்டு போத்தல்களும் வாழைக்குலையொன்றும் கொண்டுவரச் சொல்லியிருந்தார். கொண்டு போனவற்றை உள்ளே வாங்கி வைக்கும்படி தனது வேலைக்காரனிடம் சொன்ன அட்வக்கேற், துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு பவ்வியமாக நிற்கிற மயிலரை மிகுந்த யோசனையோடு பார்த்தார்.

''மயிலு.... இந்த பொலிஸ்காறன் ஓடி ஆடி நிறைய வேலைகள் செய்திருக்கிறான் போலை இருக்குது. நீதிபதி

யையும் ஏதோ விதமாகக் கைக்குள்ளே போட்டுக் கொண்டு விட்டான் என்று கதைகள் அடிபடுகுது. நீதிபதியினுடைய கையிலைதான் எல்லாமிருக்குது. அவர்தானே தீர்ப்பு வழங்குகிற ஆள்..''

மயிலருக்கு லேசாக எரிச்சல் உண்டாயிற்று.

''ஐயா... எப்படியிருந்தாலும் நீதி நீதிதானே. சாட்சி சொன்ன எல்லாருமே மாட்டுக் கன்று என்னுடையதென்று சொல்லியிருக்கிறாங்கள். நீங்களும் எனக்காக நல்லாக வாதாடி இருக்கிறீங்கள்... ஐயா.... வாயை வயித்தைக்கட்டி அதை இதையெல்லாம் வித்து எண்ணூறு ரூபாவுக்கு அதிக மாக இத்த வழக்கிலை நான் செலவழிச்சிருக்கிறேன்....''

கொஞ்ச நேரம் நிறுத்திவிட்டு உடைந்து கம்மிய குரலிலே அட்வக்கேட்டைப் பார்த்துக் கேட்டார் மயிலர்:

''ஐயா, உலகத்திலை எல்லா விஷயத்தை விடவும் நீதிதானே பெரியது. நீதிவான் நீதி தவறி நடக்கிறதில்லை என்றுதானே வழக்கமிருக்குது. அவர் கடவுளைப் போலை தானே... பொலிஸ்காரன் என்னதான் தலைகீழாக நிண்டா லும் நீதிக்கு விரோதமாக நீதிவான் எப்படி ஐயா தீர்ப்புக் கொடுக்க முடியும்?''

அட்வகேட் நமட்டுச் சிரிப்புச் சிரிக்கார். 'மடையா நீ எந்த உலகத்தில் நின்று இந்த வார்த்தைகளைச் சொல் கிறாய்' என்று சிரிப்பு கேலியாய் முனகிற்று.

''மயிலு.... அதெல்லாம் பார்த்துக் கொள்ளுவம், பொலிஸ்காரனை கூட்டிலே எத்தி இண்டைக்கு என்ன உலுப்பு உலுப்பப் போறேன் என்று வந்து பார்... கடவுளிலை இனிமேல் பழி போட்டுக் கொள். அவர் உன்னைக் கைவிடமாட்டார்... அது சரி மயிலு, இந்தத் தேன் சுத்தமானதுதானே....?''

''ஐயா உங்களுக்காக இதை நான் என்னுடைய கையினாலேயே எடுத்துக் கொண்டு வந்தனான். தேன்

கூட்டை நான்தான் ஐயா கொழுத்தி. தேன்வதையை எடுத்துப் பிழிஞ்சு வந்திருக்கிறேன். சுத்தமான தேன் ஐயா.... என்னுடைய முதுகெல்லாம் ஒரே குளவிக் கடி தான்... அது சரி ஐயா, எப்ப ஐயா இந்த வழக்குக்கு தீர்ப்பு வரும்?''

மயிலரின் பூனைக்கண்களிலே ஆர்வமும், ஆவலும் மின்னித் தெரிந்தன. அட்வக்கேட் முகத்தைச் சுழித்துக் கொண்டு குரலை உயர்த்தினார்.

''மயிலு.... ஒரு விஷயத்தை என்னாலை திரும்பத் திரும்ப சொல்ல முடியாது.... என்னாலை இயலக்கூடிய அளவுக்கு நான் இந்த வழக்கிலை வாதாடுகிறேன். இந்த வழக்கிலை ஒரு 'பாயிண்ட்' சொல்லுறதுக்காக நானூறு ரூபா செலவிலை இங்கிலாந்திலை இருந்து நான் ஒரு சட்டப்புத்தகமும் வரவழைத்து இருக்கிறன்.... குகன், மேசையிலை உள்ள அந்தப் பெரிய 'வெப்ஸ்டர் டிக்ஷனரி'யை எடுத்துக்கொண்டு வா.... குயிக்....''

மயிலர் மானசீகமாகத் தன்னுடைய தலையிலே மளார் மளாரென்று குட்டிக் கொண்டார். தனக்காக இந்த மனிதர் தனக்குச் சொல்லாமலே இத்தகைய முயற்சிகளை மேற் கொண்டதையிட்டு மனம் பரவசப்பட்டது. அடுத்த முறை வரும்போது ஆறேழு கோழிகள் கொண்டுவந்து ஐயாவுக்குக் கொடுக்க வேண்டும் என மனதினுள் நினைத்துக் கொண் டார் மயிலர்.

குகன் அந்தப் பெரிய 'டிக்ஷனரி'யை தகப்பனிடம் கொடுக்க, ''இந்தா இதை ஒருக்கால் கையிலை வைத்துப் பார்....'' என்று மயிலரிடம் நீட்டினார் அட்வக்கேட்.

மயிலர் துடிதுடித்துப் பின் வாங்கினார்.

''என்ன ஐயா இது? ஒரு எழுத்துக்கூடத் தெரியாத எனக்கு இதைத் தந்து... இது சரஸ்வதி ஐயா... நீங்களே வைச்சிருங்க. என்ன பெரிய புத்தகம் ஐயா....''

"....மயிலு, இதை வைச்சுத்தான் உன்னுடைய வழக்கை நார் நாராய் நான் கிழிக்கப் போறன். உண்மையிலை சொல்லப் போனால் இந்தப் புத்தகத்துக்கும் நீ தான் காசு தர வேணும்.... ஆனால் நீ ஒரு ஏழை மனிஷன்.... உன்னட்டைக் கேட்கக் கூடாது... அதெல்லாம் சரியுமில்லை.... இது கொம்புத் தேன்தானே... நல்லாக வடிச்சு சுத்தமாகத்தானே கொண்டு வந்திருக்கிறாய்....?''

மயிலர் முகத்திலே உறுதி துலங்கச் சொன்னார்.

''ஐயா, இதைப் போலை அருமையான தேனை நீங்கள் எங்கையும் கண்டிருக்க மாட்டியள். இது திறமான கொம்புத்தேன் ஐயா. ஒருக்கால் எடுத்துப் பாருங்க. கண்ணாடி போலை என்ன சுத்தமாயிருக்குது...''

முகத்திலே திருப்தியோடு மயிலரைப் பார்த்தார் அட்வக்கேட். நரைத்த தலையைச் சொறிந்து கொண்டார் மயிலர்.

''ஐயா... இன்னொரு விஷயம்.... ஐயாவுக்கு நான் ஒரு மூட்டை மொட்டைக் கறுப்பன் நெல்லும், கொஞ்சம் கோழியளும் கொண்டு வந்து தரவேணும் எண்டு இருக்கிறேன்....''

அட்வக்கேட்டின் முகம் மலர்ந்தது.

''அதெல்லாம் என்னத்துக்கு மயிலு....? நீ ஒரு ஏழை மனிசன்...''

மயிலர் மெல்லச் சிரித்தார், கனிவு ததும்ப.

''இல்லை ஐயா... மொட்டைக் கறுப்பன் அரிசியை ஒருக்கால் சமைச்சு சாப்பிட்டுப் பாருங்க... பிறகு ஒரு நாளும் அதை விடமாட்டியள்.... பட்டணத்திலை இதெல்லாம் எங்கை கிடைக்கப் போகுது....? நீங்க சும்மா இருங்கையா நான் கொண்டு வாறன்...''

அலுத்தாற் போலச் சொன்னார் அட்வக்கேட்.

"சரி மயிலு... என்னவோ நீயும் விருப்பப்படுகிறாய்.... சரி உன்னுடைய விருப்பம் போலை செய்யலாம்.... அது சரி, கோழியைப் பற்றிச் சொன்னியே... அதெப்படி? நல்ல இறைச்சிக் கோழிதானே....?"

"ஓம் ஐயா, நல்ல இறைச்சிக் கோழிதான், முட்டை போடுற பருவத்திலும் நாலைக் கொண்டு வாறேன்..."

''சரி மயிலு, அப்ப அடுத்த முறை வாற போது இதுகளைக் கொண்டு வாவன்...''

வழக்குக்கு கூப்பிடப்பட்டபோது மயிலருடைய அட்வக்கேட் எழுந்து நீதிபதியைப் பார்த்து எதையோ ஆங்கிலத்தில் சொன்னார், நீதிபதியும் ஏதோ சொன்னார். அடுத்த பெயரைக் கூப்பிட்டார்கள். மயிலர் வெளியே போக அவரை அட்வக்கேட் பின் தொடர்ந்தார்.

''மயிலு.... அந்தப் பக்கத்து அப்புக்காத்துக்கு சுகமில்லையாம். நீதவான் தவணை போட்டிருக்கிறார். ஐப்பசி ஐஞ்சாம் திகதிக்கு. நீ எதுக்கும் யோசிக்காதை. உனக்காக வேண்டி நான் ஒருக்கால் நீதவானோடையும் பேசிப் பார்க்கிறன்... ஆனால் அடுத்த முறை வாறபோது கோழிகளை மறந்திடாதை.... தீபாவளியும் வருகுது... வேறை ஏதவோவும் கொண்டு வாறன் எண்டு சொன்னனி, என்ன அது, மறந்தே போனேன்...''

''மொட்டைக் கறுப்பன் நெல்லு ஐயா..."

சொல்லிவிட்டு மயிலர் தயங்கிக் கொண்டு நின்றார்.

"என்ன விஷயம்; மயிலுவுக்கு என்ன யோசனை?"

"ஒன்றுமில்லை ஐயா... அடுத்த தவணையோடை இந்த வழக்கு முடிஞ்சிடுந்தானெ ஐயா.... எவ்வளவு பணக் கஷ்டமும் மனக்கஷ்டமுமாய் இருக்குது... எனக்கு கடவுளுக்கு அடுத்ததாக நீங்கள்தான் ஐயா...."

''என்ன மயிலு.... என்னை நீ கடவுளாய் நினைச்சு

நம்பலாம். உனக்காக நானூறு ரூபா செலவழிச்சு நான் சட்டப் புத்தகத்தை வாங்கினதை வைச்சே நீ என்னை யாரென்று தெரிஞ்சிருக்க வேணும்.... பயப்பிடாதை... ஆனால் மறந்திடாதை, இந்த முறை உன்னுடைய பொறுப்புத்தான் தீபாவளி....''

வெள்ளம் பெருகி, அரசமரத்தோடு நிற்கிறதை மிகுந்த கவலையோடு பார்த்துக் கொண்டு நின்றார் மயிலு. இந்த வெள்ளம் வடிகிற வரையிலே கிராமத்திலேலிருந்து யாரும் வெளியே வரவோ, வெளியிலிருந்து யாரும் உள்ளே போகவோ முடியாது.

மயிலருக்கு எரிச்சலும், ஆத்திரமும் வந்தன. தூஷணத்திலே அரசமரத்தையும் வெள்ளத்தையும் திட்டினார்.

''இந்த முறை வெள்ளம் வழியட்டும். இந்த அரசமரத்தை வெட்டி, இந்த மேட்டையும் சமப்படுத்த வேணும். அப்பத்தான் இந்த ஊருக்கும், சனங்களுக்கும் நல்ல காலம் உண்டாகும்...''

## நான்கு

வெள்ள நிவாரணத்திற்காக பொய்கையூருக்கு வந்த அரசாங்க அதிகாரிகள் அரசமரத்தடிக்கு கொஞ்சம் முன்னதாக ஜீப்பை நிறுத்தி விட்டு கிராமத்தினுள் எப்படிப் போவதென்று தலையைச் சொறிந்து கொண்டு நின்றார்கள். இப்போதைய எம். பியும், சென்ற முறை அவரோடு தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற பிரமுகரும் ஒருவர் பின் ஒருவராக அவ்விடத்திற்கு வந்துநின்றார்கள். சென்ற முறை தேர்தலில் மெஜாரிட்டி இரு நூறு வாக்கு

கள்தான். சென்ற தேர்தலில் இந்தக் கிராமத்தில் நானூற்றி நாற்பத்தி எட்டுவாக்குகள் பதிவாகியிருந்தன. செல்லுபடியாகாதவை நூற்றி ஏழு வாக்குகள் மட்டுமே.

அரசமரத்தடிப் பக்கத்திலே இன்னும் முழங்கால் வரைக்கும் வெள்ளம் நின்றது. ஒற்றையடிப் பாதையெங்கும் சேறும் சகதியும் குழம்பிக் கலங்கி தரையே புதை மணலாய் தோற்றமளித்துக் கொண்டிருந்தது.

வேட்டியைத் தலையில் சுற்றிக் கொண்டே கோவணதாரியாய் வெள்ளத்தைத் தாண்டி வந்த சங்கரனும் குமாரனும் எம். பி. யை மிகவும் பவ்வியமாகக் குனிந்து வணங்கினர். எம். பி. தன்னோடு போட்டியிட்டவரை இகழ்ச்சியாகப் பார்த்தவாறே பிரசங்க தோரணையில் சொன்னார்:

"குமாரு, வெள்ளமெண்டு அறிஞ்ச உடனை நான் பொய்கையூரைத்தான் நினைத்தேன். எனக்குப் பிறந்த ஊர் மாதிரி இது. உடனேயே 'கவண்மெண்ற்' அதிகாரிகளோடை தொடர்பு கொண்டு அவர்களையும் கூட்டிக் கொண்டு வந்து இங்கே நிற்கிறேன். இந்த வழியெல்லாம் சேறாகக் கிடக்குது. அதைப்பற்றி எல்லாம் எனக்குக் கவலையில்லை. உனக்குத் தெரியுந்தானே .... எலக்ஷன் நடக்கிறதுக்கு மூன்று நாளைக்கு முதல் இது போலை வெள்ளத்துக்குள்ளை முழங்காலளவு தண்ணியிலை உங்களுடைய ஊருக்குள்ளை நான் நடந்து வந்து உங்களுடைய கஷ்டங்களைப் பார்க்கவில்லையோ? ... நாலு நாளாக எனக்கு ஒரே சளியும், காய்ச்சலும். டொக்டர் படுக்கையிலையே ஓய்வு எடுக்கச் சொல்லி இருந்தார். எனக்கு மனம் கேட்கவில்லை, வந்திட்டேன்"

சொல்லி முடித்து விட்டு லேஞ்சியை எடுத்து மூக்கைத் துடைத்தார். சீறினார். பிறகும் துடைத்துவிட்டு நெற்றிப் பொட்டுகளை விரலால் அழித்திக்கொண்டார்.

அரசாங்க அதிகாரிகள் எரிச்சலின் மேல் நின்றார்கள். இந்த அரசியல் பிரமுகர்கள் இங்கே வந்திராவிட்டால்

திரும்பிப் போய், கிராமத்திற்குள் போக முடியவில்லை என்று 'றிப்போர்ட்' எழுதிக் கொடுத்து விட்டு சந்தோஷமாக இருந்திருக்கலாம். அவர்கள் வந்து அரைமணி நேரம் கழிந்து பின்னர் தான், அரசியல் பிரமுகர்களே அங்கு வந்தனர்.

எம். பி தொண்டையைக் கனைத்துக் கொண்டார்: ''இந்த வெள்ளைக் கஷ்டத்தை இல்லாமற் செய்ய வேண்டுமென்றால் ஒற்றையடிப்பாதையை அகட்டி உயர்த்தி றோட்டாக்க வேணும். எப்படியும் நான் இதைப் பாராளுமன்றத்திலை பேசி சீக்கிரம் ஒரு முடிவு எடுத்துத் தருவன்...''

குமாரன் தலையைச் சொறிந்தான்.

''என்ன குமார்....ஏதவோ சொல்ல நினைக்கிறாய் போலையிருக்கு....என்ன வென்று சொல்லு''

''இல்லை ஐயா, இந்த வெள்ளத்தை வராமல் நிற்பாட்ட வேணுமெண்டால் இந்த அரசமரத்தை வெட்ட வேணும். பிறகு இந்த மேட்டு நிலத்தை உழுது சமமாக்க வேணும். பிறகுதான் றோட்டுப் போட்டாலும் சரி....என்ன செய்தாலும் சரி....அதிலை ஒரு பிரயோசனமிருக்கும்....''

எம். பி. சிறிதுநேரம் யோசித்தார். பிறகு தன்னுட்னுட்தானே முணுமுணுத்துக்கொண்டு தலையை அசைத்தார்.

'அரச மரத்தை வெட்டுவதென்றால் அது இலேசான வேலையில்லை. அதருகு அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டும். புத்தர் அரச மரத்தின் கீழிருந்து ஞானம் பெற்றதால், அரச மரமும் வழிபாடடுக்குரியது. அரச மரத்தை வெட்டுவதற்கு அனுமதி கேட்கப் போனாலே மந்திரிகளும், புத்த குருமாரும் சண்டைக்கு வந்துவிடுவார்கள்...''

"சரி, இதை நான் உங்களுக்கு எப்பாடு பட்டும் செய்து தருகின்றேன். பதினையாயிரம் ரூபா இருந்தால் இதைச் செய்துவிடலாமென்றுதான் நினைக்கிறேன். ஆறு மாதத்துக்குள் இந்த வேலையை நான் செய்து தந்துவிடுவேன்... அது சரியப்பா...இந்த அதிகாரிகள் கொண்டு வந்த உணவுப் பண்டங்களையும், உடுப்புக்களையும் இப்ப உங்களுக்கு எப்படித் தருகிறது?''

எம். பி.யின் பக்கத்திலே நின்று அரசாங்க அதிகாரிகளின் முகத்திலே சந்தோஷம் இப்போது மலர்ந்தது.

குமாரனும், சங்கரனும் ஒரே குரலில் சொன்னார்கள்:

''அதெல்லாம் பெரிய விஷயமில்லை. ஐயோ.... நாங்க உடனே ஊருக்குள்ளை போய் அங்கையுள்ள எல்லா ஆம்பிளையளையும் சட்டெனக் கூட்டிக்கொண்டு வந்திடுவம்...''

அரசாங்க அதிகாரிகள் முகத்திலும், எம். பி.யின் முகத்திலும் பிரச்சினையொன்றிலிருந்து சுமுகமாகவே விடுபட்ட நிம்மதியான மகிழ்வு பொலிந்தது.

''சரி, எம். பி. ஐயா வந்து நிற்கிறதாச் சொல்லி, எல்லா ஆட்களையும் கூட்டிக்கொண்டு ஒடி வா....''

எம்.பி. சொல்லிக்கொண்டே தன்னுடைய காரிலே போய் உட்கார்ந்துகொண்டார். அவருடைய மனதிலே பொய்கையூரின் அவ்வளவு வாக்குகளையும் எப்படி ஒட்டு மொத்தமாகப் பெற்றுக் கொள்வது என்ற சிந்தனையே இப்போது வியாபித்திருந்தது. இதுதான் அருமையான தருணம் என்று மனம் முணு முணுத்துக் கொண்டது.

வெய்யில் அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது. இப்போது தரையெல்லாம் நன்றாகக் காய்ந்து மீண்டும் அந்த ஒற்றையடிப்பாதை துல்லியமாகத் தெரிந்தது. மாட்டுக் கூட்டம் பழையபடியே பரட்டைக் காட்டிலே மேய்ந்தும், இளைப்பாறிக் கொண்டும் நின்றது.

சங்கரனும், பசுபதியும், கணபதியும், அரசமரத் தடியிலே மயிலரை எதிர்பார்த்துக் கொண்டு நின்றார்கள். பத்து மணிக்கு கோயில் மணி அடிக்கிறபோது வருவதாகச் சொன்ன மயிலரை, கோயில் மணி அடித்து இவ்வளவு நேரமாகியும் காணவில்லையே என்று அவர்கள் விசனப் பட்டுக் கொண்டிருந்தனர்.

தொலைவிலே இன்னும் இருவரோடு மயிலர் வருவது தெரிந்தது. சங்கரன் தனக்குள்ளே முணுமுணுத்தான்:

"கோடாலி சேகரிக்கப் போனதிலை நேரஞ் சுணங்கி இருக்கும் போலை. என்னவோ இந்த வயது போன காலத்திலேயும் மயிலர் அப்பு எவ்வளவு சுறுசுறுப்பா யிருக்கிறார்.... அவர் சொல்லுறது போலை இந்த அரச மரத்தைத் தறிச்சிட்டால் பல கஷ்டங்களுக்கு முடிவு வந்திடும்..."

"அரசமரத்தைத் தறிக்க வாற ஆட்களுக்கு செல்லத் துரை வைத்தியர் தன்னுடைய செலவிலை மூன்று நேரத துக்கும் சாப்பாடு தாறதெண்டு சொல்லியிருக்கிறார். அதுவுமொரு நல்ல விஷயந்தானே... எப்பிடியும் நாளைக்கு பத்துப் பேரெண்டாலும் மரம் தறிக்க வருவாங்கள்...."

திரட்சியான தோள்களுடன் பயில்வானைப் போல நிற்கிற கணபதி சொன்னதற்கு சங்கரன் தலை அசைத் தான்.

"இது ஊருக்கு நன்மையான விஷயந்தானே.... கோடாலி நிறைய இருந்தால் ஆட்களும் நிறையத் தேவைப்படும்.... பறுவாயில்லை, இருக்கிற கோடாலியை வைத்துக் கொண்டே மாறி மாறி நாங்கள் தறித்து விழுத் துவம்..."

மயிலர் வேர்வையை வழித்தெறித்துவிட்டு, வேட்டியை அவிழ்த்து உதறி தலையிலே முண்டாசாகக் கட்டிக் கொண்டார். கூசிக்கூசிப் பார்க்கிற பூனைக் கண்களிலே

மலர்ச்சி பரிமளித்திருந்தது. நெஞ்சினிலே அடர்ந்திருந்த நரைத்த ரோமங்களைத் தடவிக்கொண்டே கோபாலனைப் பார்த்தார்.

"தம்பி... இப்போ நாங்கள் எல்லாருமாக ஏழுபேர் நிற்கிறம். ஊரெல்லாம் திரிஞ்சும் ஐஞ்சு கோடாலிதான் நல்லதாகக் கிடைச்சிருக்கிறது. அதிலும் ஒண்டுக்கு காம்பு நல்லாயில்லை... மரத்தைத் தறிக்கத் தொடங்க முதல், இந்தப் பிள்ளையாரைக் கொண்டுபோய் அரளி மரத்தடியிலை வைக்க வேணும்... பிள்ளையாருக்கு தேங்காய் அடிச்சு, கற்பூரங்கொழுத்திக் கும்பிட்டதற்குப் பிறகுதான் காரியத்தைத் தொடங்க வேணும்..."

மயிலர் சொன்னதற்கு எல்லோருமே தலை அசைத்தார்கள்.

மயிலர் அந்த அரசமரத்தைப் பார்த்தார். எவ்வளவு பெரிய அரசமரம். இரண்டுபேர் கட்டிப்பிடித்து அளக்கக் கூடிய அடிப்பாகம். சற்று உயர்ந்து பல கிளைகளைப் பரப்பி இறுமாப்புள்ள மனிதனைப்போல நிதானமாக நிற்கிற அரசமரம். கிராமத்துப் பறவையினங்களுக்கும். விலங்குகளுக்கும் சரணாலயமாக எவ்வளவோ காலமாகத் துணை நிற்கிற அரசமரம். வயதானாலும் நோயின்றி, சோம்பலின்றி நிற்கிற அரசமரம். அதன் சரித்திரத்தோடு தன்னுடைய வாழ்க்கையும் இணைந்து கழித்ததை மயிலர் நினைவிலே இப்போது மீட்டுப் பார்த்தார். சிறுவனாயிருந்தபோது அதிலே ஏறிக் குதித்து விளையாடியிருக்கிறார். அப்புவுக்கு பயந்து வந்து ஒளிந்திருக்கிறார். குருவிச்சைச் செடிகளை அதிலிருந்து வேரோடு பெயர்த்தெடுத்த போது கால் இடறி தலைகீழாக விழுந்து பிடரியிலே காயப்பட்டிருக்கின்றார். அன்னம்மாவோடு இரவிலே திருட்டுத்தனமாகச் சந்தித்து சரச சல்லாபமெல்லாம் அந்த மரத்தடியிலேயே செய்திருக்கிறார். இளையவளோடு மரத்தின் ஓரமாக நின்றபோது, நல்ல பாம்பு ஒன்று அவளது காலுக்குள்ளால் நெளிய அதை அப்படியே தலை

யில் பிடித்துத் தூக்கி அரசமரத்தோடு ஓங்கி அடித்து சிதற வைத்திருக்கிறார். மாட்டுக் கூட்டங்களை மேய்த்துக் கொண்டே அம்மரத்தின் கீழேயிருந்து நித்திரையாகியிருக்கிறார். ஊருக்கு வருகிற பிரமுகர்களையெல்லாம் அரசடியில் நின்று வரவேற்றிருக்கிறார். அரசடிப் பிள்ளையார் முன் பலருக்கு திருமணம் செய்துவைத்திருக்கிறார். தன்னை மறந்து வெறியிலே புலம்பியிருக்கிறார் .... இப்படியே அத்தியந்த நண்பனைப்போல அவரோடு உறவு கொண்டிருக்கிற அந்த அரச மரம்...

''பிள்ளையாரையும் தூக்கி வைச்சாச்சுது. தேங்காய் அடிச்சு கற்பூரமும் கொழுத்தியாச்சுது. பிறகென்ன அப்பு...மரத்துக்கு முன்னாலை நின்று கடுமையாக என்ன யோசிக்குறீங்கள்? முதலாவது கொத்தையும் நீங்களே கொத்துங்க...'

மயிலர் சுயநினைவுக்கு வந்தார். இலேசாகக் கலங்கி இருந்த கண்களினைத் துடைத்துக்கொண்டார். தலையில் கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்து உதறிவிட்டு ஓரமாகப் புல்வெளிலே மடித்து வைத்தார்.

''இந்த அரசமரத்தை நினைச்சால் பெரிய கவலையாகவும் இருக்குது.... பிறந்ததிலை இருந்து பழகின கூட்டாளியைப் போலை இருக்குது. அதுதான் என்னையறியாமலே மனதுக்கு சங்கடமாயிருந்தது. ஆனால் என்ன செய்யிறது? ஊர் நன்மைதான் எல்லாத்தையுமே விடப் பெரிசாக இருக்குது.... சரி, கோடாலியை இங்கை கொண்டுவா... கடவுளே பிள்ளையாரே...''

தெற்குப் பக்கத்துக் கிளைகளையே முதலில் வெட்டுவதாக ஏற்பாடு. கிளையைத் தறிக்கத் தொடங்கிய பிறகுதான் இது எவ்வளவு கஷ்டமான வேலை என்பதனை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். அவ்வளவு கடினமான கொழுத்துத் திரண்ட கிளைகள். கணபதிக்கு கூட மூச்சு

வாங்கியது. வெட்ட வெட்ட எவ்விதமான சேதமும் படாததுபோல அந்தக் கிளைகள் புடைத்திருந்தன.

சங்கரன் திடீரென்று மெல்லிய குரலிலே கிசுகிசுத்து சைகை செய்தான்.

"அப்பு, அங்கை பாருங்க... பொலிஸ்காரச் சுப்பையா உங்களை குளத்தடியிலை நின்று வெகு அவதானமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான்... அவனுடைய பார்வை நரிப் பார்வை.... ஏதவன் கேள்வி கேட்கப் போகிறானோ?"

அவர்கள் எதிர்பார்த்ததுபோல அன்றி, சுப்பையா ஒன்றும் பேசாமல் அங்கிருந்து போய்விட்டான்.

## ஐந்து

மயிலருக்கு ஒன்றுமே புரியவில்லை. பயத்தால் உறைந்துபோய் அந்த 'றிமாண்ட்' அறைக்குள் பிரமை பிடித்தவர் போல உட்கார்ந்திருந்தார். அவருக்குப் புரியாத பாஷையிலே திட்டியவாறு பொலிஸ்காரன் ஒருவன் கன்னத்தைப் பொத்தி அடித்த அடியின் வலி இன்னமும் வேதனையாயிருந்தது. காது கிண்ணென்று இரைந்து லேசாக இரத்தமும் வழிந்து கொண்டிருந்தது. உடலின் ஒவ்வொரு பாகமும் தாங்க முடியாத நோவால் அவஸ்தை பட்டுக்கொண்டிருந்தது.

அரசமரத்தில் உட்கார்ந்து கிளைகளைத் தறித்துக் கொண்டிருந்தபோது திடுமென ஜீப்பும், வான் ஒன்றும் வந்து நின்றதை அவர்கள் கண்டு திகைத்து, அந்தத் திகைப்பில் இருந்து விடுபடுமுன்னரே அந்த வாகனங் களிலிருந்து தொப் தொப்பென்று குதித்த பொலிஸ்காரர் கள் அரசமரத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். எல்லார் கையிலும் துப்பாக்கி.

கணபதிக்கு அவர்களைக் கண்டதும் வேட்டி நனைந்து விட்டது.

''எல்லாரும் மரத்திலையிருந்து இறங்குங்கடா...''

கொச்சையாக வந்த அந்தக் கடூரமான மிரட்டல் குரலிலே எல்லோரும் பொத் பொத்தென்று கீழே குதித்து விழுந்தார்கள். விழுந்தவர்கள் எழுந்திருக்க முதல் பூட்ஸ் கால்களும் கைகளும் அவர்களை மூர்க்கத்தனமாக உதைத்து குத்தி, அடித்துத் தாக்கின. துப்பாக்கிப் பிடிகளால் எவ்விதமான தயவு தாட்சண்யமுமின்றி அவர்கள் நையப் புடைக்கப்பட்டார்கள்.

என்ன காரணத்திற்காக தங்களை அப்படிப் பொலிஸ்காரர்கள் தாக்குகிறார்களென்பதை அவர்களால் கொஞ்சமும் புரிந்துகொள்ள முடியவில்லை. வலி பொறுக்க முடியாமல் ''ஐயா, ஐயா'' என்று அவர்கள் முனகியதைப் பற்றி பொலிஸ்காரர்கள் கொஞ்சமும் அக்கறைப்படவில்லை. சுற்றிவர நின்று அவர்களை மூர்க்கமாகத்தாக்கியவர்கள், கொஞ்ச நேரத்தில் களைத்துப்போய் வியர்வையைத் துடைத்துக் கொண்டார்கள்.

''இதிலை, மயிலு ஆரடா?''

மயிலர் உடல்முழுவதும் நிறைந்த வலியோடு தயங்கியபடியே, ''நான்தான் ஐயா மயிலு...'' என்று முன்னாலே போனவரைச் சிங்களத்திலே வைது கொண்டே ஓங்கி அறைந்தான் இன்னொரு பொலிஸ்காரன்.

''நீதானேங் இந்த மரம் வெட்ட லீடர்?''

அவன் கொச்சைத் தமிழிலே கேட்டதனைப் புரிந்து கொள்ளாத மயிலர் குருட்டாம் போக்கில் இல்லையென்று தலை அசைத்தார். உடனே இன்னொரு பொலிஸ்காரன், துப்பாக்கியை மயிலரது கழுத்திலே பதித்து, ''பண்டி.... சுடுவன் சொல்லுடா'' என்று அழுத்தித் தள்ளினான்

மயிலர் அழுதவாறே, "ஐயா. நீங்க சொல்லுறது எனக்கு விளங்கேல்லை ஐயா" என்றார்.

"என்னடா உனக்கு சிங்களந் தெரியாது. சிங்களம் ராஜபாஷைய்...மோடயா..."

ஆத்திரத்தோடு மீண்டும் அந்தப் பொலிஸ்காரன் சொல்லிவிட்டு சுத்தமான தமிழிலே தூஷணங்களாகப் பொழிந்து தள்ளினான்.

எல்லோரையும் விறகு சுள்ளிகள் போல அந்தப் பொலிஸ்காரர்கள் நெட்டித் தள்ளி ஏற்றினார்கள். வானுக்குள்ளேயே அடைபட்ட அவர்கள் உடல் நோவால் முனகிக் கொண்டிருந்தனர்.

மயிலருக்குப் பக்கத்திலே யிருந்த கணபதி மெல்லிய குரலிலே முணுமுணுத்தான் :

"அப்பூ...இது ஆருடைய வேலை தெரியுமோ?... இதெல்லாம் சுப்பையன்—அந்த நாய்ப் பயல் பொலிசுக்காரச் சுப்பைய்யனுடைய வேலையாய்த்தான் இருக்க வேணும்...."

"சுப்பைய்யன்!" — ஆத்திரத்தோடு பொருமினார் மயிலர்: "கணபதி நீ சொல்லுறது சரியாய்த்தானடா இருக்கும்...பிள்ளையாரே...நீர் ஒரு புதுமையான கடவுளெண்டால் இவனுக்கு சரியான தண்டனையைக் கொடும்... பொறுக்கிநாய்."

மயிலரால் தொடர்ந்து பேச முடியவில்லை. முனகலோடு மௌனமானார். கண்களிலிருந்து தாரைதாரையாகக் கண்ணீர் வழிந்தோடியது...

அந்த ஏழு பேரையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்து, 'ரிமாண்ட் அறை'க்குள் தள்ளிப் பூட்டினார்கள் பொலிஸ்காரர்கள்.

அ—3

''இவ்வளவு காலமும் இருந்துவிட்டு இந்த வயதிலை பொலிஸ் ஸ்டேசனுக்கு வரும்படியாக வந்திட்டுதே கடவுளே....நாங்கள் ஆரும் எங்கடை ஊரிலே இருந்து இது வரை காலமும் பொலிசுக்கு வந்ததில்லையே ....பிள்ளை யாரே இப்பிடியெல்லாம் எங்களை ஏன் சோதனை பண்ணு கிறீர்...?''

மயிலருடைய பிரலாபம். மற்றவர்களையும் நெகிழ்ந்து திணறவைத்தது, உடல் நோவு, மனப்பயத்தோடு உண வில்லாததால் 'குன்றிச்சோர்ந்து போயிருந்தனர். நாக்கு வரண்டு கண்கள் மங்கிக் கொண்டிருந்தன.

லேசாக தூக்கத்தில் இருந்தவர்களை ''அடோ'' என்ற சத்தம் திடுக்கிட்டு விழிக்கவைத்தது. விழித்தவர்களை வெளியே வரும்படி பொலிஸ்காரன் கட்டளையிட்டான். வெளியே வந்தவர்களை இன்ஸ்பெக்டரின் முன்னால் கொண்டுபோய்விட்ட அதே பொலிஸ்காரன் சிங்களத் தில் சிறிது நேரம் எதையோ கூறினான். இன்ஸ்பெக்டரின் முகத்திலே கடுமையோடு கோபமும் படர்ந்தது. வாட்ட சாட்டமான அவன், கதிரையைப் பின்னே தள்ளிவிட்டு எழுந்து முன்னேவந்தான்.

ஏழு பேரையும் மிரட்டுகிறாற் போலப் பார்த்து விட்டுக் கணபதியின் பக்கத்திலே போய் நின்றவர், யாரும் எதிர்பாராதவிதமாக கணபதியின் கன்னத்திலே ஓங்கி அறைந்துவிட்டு பூட்ஸ்காலால் எட்டி உதைத்தான்.

தீனமாக அலறியபடியே சுவர் ஓரமாகச் சுருண்டு மடிந்துபோய் விழுந்தான் கணபதி.

எல்லோரது உடலும் வேர்வையால் தெப்பமாய் நனைந்து தடதடவென்று ஆடிற்று. கண்கள் கலங்கின. தொண்டைவற்றி நெஞ்சு வேகமாய் அடித்தது.

மயிலருக்கு நெஞ்சினுள்ளே ஒவென்று அழுகை பொங் கிற்று. 'என்ன அழகான வாட்டசாட்டமான, திரட்சியான

உடல்கொண்ட இரக்கமுள்ள வாலிபன் இந்தக் கணபதி. எந்தவிதமான பயமுமில்லாமல் நின்றானென்றால் இதே கணபதி, இந்தப் பொலிஸ்காரனை ஒரே உதையிலே கதறிக் கொண்டு ஓடச் செய்திருப்பான்... கடவுளே, ஏன் இப்படி எங்களை எந்தக் காரணமும் இல்லாமல் சோதிக்கிறாய்?... நாங்கள் என்ன குற்றம் செய்தோம்?'

பொலிஸ் இன்ஸ்பெக்டர் அங்குமிங்குமாகக் கொஞ்ச நேரம் நடந்தான். பிறகு மேசையிலிருந்த குண்டாந்தடியை எடுத்து உள்ளங்கையில் தட்டியவாறே சங்கரனுக்கு முன்னால் வந்தான்.

''டே, உனக்குப் புத்தர் சாமியைத் தெரியுமாடா?''

....சங்கரனுக்கு தலை சுற்றியது. யார் அவர்? யார் அவர்?

''என்னடா....உனக்குப் புத்தரைத் தெரியாது....?''

வெறுப்பும் ஆத்திரமும் இழைந்த குரலிலே மீண்டும் இன்ஸ்பெக்டர் உறுக்கினபோது சங்கரனுக்கு அவனை யறியாமலே சர்வாங்கமும் நடுங்கின. மூளையைக் கசக்கிக் கொண்டே முழித்தான்,

''நாங்க பள்ளிக்கூடத்துக்கு ஒரு நாளுமே போனதில்லை ஐயா....''

இன்ஸ்பெக்டர் முறைத்தான்:

''அரச மரத்துக்கு கீழை எந்தச் சாமியடா இருக்கிறது?''

சங்கரனின் மனம் இலேசாகிற்று. 'ஓ அதையா ஐயா கேட்கிறீர்கள்?' என்று மனதிற்குள் உற்சாகத்தோடு சொன்னபடி பதிலளித்தான்.

''அரசமரத்துக்குக் கீழே பிள்ளையார் இருப்பார் ஐயா....''

இன்ஸ்பெக்டர் குண்டாந்தடியால் அவன் முதுகிலே விளாசிவிட்டு ஆத்திரம் பொங்கச் சீறினான்:

''பிள்ளையார்....அது ஆரடாபிள்ளையார்....? உனக்குப் புத்தர் தெரியாதா?...''

சங்கரனுக்கு சத்தியமாகவே புத்தரைத் தெரியவில்லை. இனி ஏறுமாறாக எதுவும் சொல்வதில்லை என்று முதுகைத் தடவிக் கொண்டு நின்றான்.

''புத்தரைத் தெரியாது மோடயா....புந்தர் சிங்களச் சாமி என்று உங்களுக்குத் தெரியாது? பண்டிகள், பறைத் தமிழங்கள்...''

இன்ஸ்பெக்டர் மீணடும் போய் கதிரையிலே உட்கார்ந்துகொண்டான். அப்போது சுப்பையா வந்து அவனுக்கு சல்யூட் அடித்துவிட்டு மரியாதையோடு ஒதுங்கி நின்றான்.

இன்ஸ்பெக்டர் நீண்ட நேரமாக சுப்பையாவுக்கு அவர்களுக்கு விளங்காத மொழியில் எதையோ சொல்லிக் கொண்டிருந்தான். பிறகு அவர்களைப் பார்த்து, ''இப்ப இந்தப் பொலிஸ் ஐயா சொல்லுறதைக் கேளுங்க'' என்றான்

சுப்பையா தொண்டையைக் கனைத்துக் கொண்டு இகழ்ச்சி ததும்ப அவர்களைப் பார்த்தான்,

''இன்ஸ்பெக்டர் ஐயா உங்களுக்கு இந்த விஷயங்களைச் சொல்லும்படி எனக்கு உத்தரவிட்டுள்ளார். இலங்கையின் அரசாங்க சமயம் புத்தசமயம். புத்தர் பெருமான் அரசமரத்தின் கீழேயிருந்துதான் ஞானம் பெற்றார். அதனால் அரசமரம் புனிதமானது. மரியாதைக்கும், வழிபாட்டுக்கும் உரியது. அத்தகைய அரசமரத்தை நீங்கள் ஏழுபேரும் தறித்து விழுத்த முயற்சித்திருக்கிறீர்கள். இது பாரதூரமான குற்றம். நீங்கள் கூடிப்பேசி திட்டமிட்டு செய்த கொலை பாவம்.... நீங்கள் குற்றவாளிகள். உங்களுக்கு மேல் நீதி மன்றத்திலே வழக்குத்

தொடரப்படும். இன்றைக்கு நீங்கள் ஏழு பேரும் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் அனேகமாக பதினாலு நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்கப்படு வீர்கள்....''

சுப்பையா சொன்னதிலே அனேக விஷயங்கள் அவர் களுக்குப் புரியவில்லை. ஆனால் மேலோட்டமான விஷயம் என்னவென்று தெரிந்து கொண்டார்கள்.

விஷமமாகச் சிரித்தான் சுப்பையா:

''உங்களிலைதானே கோர்ட்டு, பொலிஸ் ஸ்டேசனெல் லாம் தெரிஞ்ச பெரிய மனிஷரெல்லாம் நிறைய இருக்கிறி யள். ஏன் இனிப் பயப்பிட வேணும்? இன்ஸ்பெக்டருக்கு எதிராகவும் ஒரு வழக்கைப் போட்டுப் பார்க்க வேண்டி யதுதானே இராவைக்கு என்ன செய்யப்போறியள்? இங்கைதான் இருக்க வேணும்....சாப்பாடொண்டும் கிடை யாது. பசி, தாகமெண்டால் உங்களினுடைய மூத்திரத்தை நீங்களே பெய்து குடிக்க வேண்டியதுதானே...அதெல்லாத் தையும் விட உடம்பிலை கோவணத்தைவிட ஒண்டுமிருக்கக் கூடாது. உடுப்புகளை உரிஞ்சு அந்தப் பொலிஸ்காறரிட் டைக் குடுங்க...''

''பிள்ளையாரே...'' என்றா ஏக்கமாகக் கூறினார் மயிலர் மற்றவர்களின் கண்கள் அவர்களை அறியாமலே கலங்கின.

அடுத்த நாட்காலையிலே அவர்கள் நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். இன்ஸ்பெக்டர் நிறையவே பேசினார். ஐந்து கோடாரிகளில் நான்கு மட்டும் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன.

அவர்கள் பெயர் கூப்பிடப்பட்டதும், அட்வக்கேட்கள் எல்லோரும் அசட்டையாயிருந்தனர். இன்ஸ்பெக்டர் நிறையப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டதும் அவர்களுக் கிடையே பரபரப்பு ஏற்பட்டது.

மயிலரைப் பார்த்த அட்வக்கேட் தனஞ்செயன். எழுந்து அவர்கள் நின்ற கூட்டுப்பக்கமாகச் சென்றார்.

மயிலருக்குப்பக்கத்தில் சென்று கிசுகிசுத்தார்:

''மயிலு....நீதவான் இப்ப உங்களைக் குற்றவாளியோ சுற்றவாளியோ என்று கேட்பார். நீங்கள் எல்லாரும் ஒரு பயமுமில்லாமல் சுற்றவாளி என்று சொல்லுங்கோ...நீங்க எதுக்கும் பயப்படாதீங்க. நான் உங்கள் எல்லாருக்குமாக வழக்குப் பேசி, எல்லாரையுமே வெளியிலை கொண்டு வந்திடுவன்...''

அட்வக்கேட்டைக் கண்டதுமே மயிலருக்கு ஓங்கி ஓவென்று அழவேண்டும் போலத் தோன்றிற்று. கண்களிலே கண்ணீர் பெருகிற்று. அந்த அரசமரத்தடிப் பிள்ளையாரே இவரைத் தனக்காக அனுப்பிவைத்தார் என எண்ணிக் கொண்டு மானசீகமாக பிள்ளையாரை விழுந்து கும்பிட்டார்.

## ஆறு

அரசமரத்தினை வெட்டிய செய்தி திடீரென எல்லாப் பத்திரிகைகளிலும் முன் பக்கச் செய்தியாய் இடம் பெறுவதற்கு கலாச்சார அமைச்சரின் ஆவேசமான பாராளுமன்றப் பேச்சே காரணமாயிற்று. 'பௌத்த தர்மமும் கலாசாரமும் எவ்விதம் வேற்று மதத்தவர்களால் அவமதிப்புக்கும், புறக்கணிப்புக்கும் உள்ளாக்கப்படுகின்றதென்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா? என ஆக்ரோஷமாகக் கேட்டார் கலாச்சார அமைச்சர்.

பௌத்த சமயத்தைச் சேர்ந்த எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பொய்கையூரில் நடந்த நிகழ்ச்சியைக்

காரசாரமாகக் கண்டித்துப் பேசினார்கள். இதைப்பற்றி விசாரித்து உடனடியாகவே அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கலாச்சார அமைச்சர் தலைமையிலே பத்துப்பேர் கொண்ட உபகுழு ஒன்று உடனேயே நியமிக்கப்பட்டது இதிலே போக்குவரத்து அமைச்சர், செயலாளராக நியமிக்கப்பட்டு, இரண்டு தினங்களிலே உபகுழு பொய் கையூருக்குச் செல்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

போக்குவரத்து அமைச்சர் வருகிறார் என்று தெரிந்ததும், போக்குவரத்து நெடுஞ்சாலைத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உறக்கமின்றி பட்டணத்திலிருந்து பொய்கையூர்வரையுள்ள வீதியைச் செப்பனிடுவதிலே தங்கள் கவனத்தினைச் செலுத்தினர். இஞ்சினியர் பெட்றோமாக்ஸ் விளக்கின் உதவியோடு வீதிகளைப் பார்வையிட்டார். வீதியோரத்தில் அலங்கோலமாய் வளர்ந்திருந்த பற்றைக்காடுகள், செடிகள் யாவுமே இரண்டு நாட்களில் சுத்தமாக வெட்டப்பட்டுவிட்டன.

வீதியோரத்துப் பாடசாலைகள் வெள்ளையடிக்கப் பட்டன. திடீரென்று அரசாங்க இலாகாக்களைச் சேர்ந்த எல்லோருமே உற்சாகமாகச் செயல்படத் தொடங்கினார் கள்.

பௌத்தசங்கங்கள் யாவும் முதன் முறையாக ஒரு மித்துச் சென்று, இந்தக் கலாச்சார அவமதிப்பில் இருந்து பௌத்தசமயத்தைக் காப்பாற்றும்படி பிரதம மந்திரியை வேண்டிக் கொண்டன. பிரதமர், அவர்களது கோரிக் கையை மிக அவதானமாகச் செவிமடுத்தார். பௌத்த சம யத்திற்கு அபாயம் எதுவும் ஏற்படுமாயின் அதை எதிர்த் துப் போராடி இரத்தம் சிந்தவும் தான் தயாராக இருப் பதாக அவர் உணர்ச்சி வசப்பட்டுக் கூறியபோது உணர்ச்சி வசப்படாத பௌத்தகுருமார்களே சிலிர்த்துப்போய், உங்களை என்றைக்கும் மும்மணிகள் ஆசீர்வாதம் செய்து இதே பதவியில் நீடிக்கச் செய்யும் என வாழ்த்துரை கூறி னார்கள்.

பத்திரிகைச் செய்தியாளர்களின் வேண்டுகோளின்படி அரசாங்க செய்தித் துறையின் குளிருட்டப் பெற்ற மோட்டார் வாகனங்களிலே பத்திரிகை ஆசிரியர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும், பொய்கையூருக்கு இலவசமான பயணிகளாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

பொய்கையூரின் அரசமரம்— திட்டமிட்ட முறையிலே அரைகுறையாக வெட்டப்பட்ட அரசமரம் பல கோணங்களில் புகைப்படம் எடுக்கப்பட்டு பத்திரிகைகளின் முதற் பக்கத்தில் பிரசுரமாயிற்று. வயது முதிர்ந்த, தெய்வீகத் தன்மை பொருந்திய அந்த மரத்தினை மூவர்ணப் படமாக்கி விற்பனைக்கு விட்டிருந்தார் ஒரு பிரசுரப் பதிப்பாளர்.

பொய்கையூர் அமைந்திருந்த மாவட்டத்தின் ஆட்சிப் பொறுப்பாளராகிய அரசாங்க அதிபர் வயதிலே இளைஞர் எதற்கும் ஒருமுறை பொய்கையூருக்குப் போய் வரவேண்டுமென்று நினைத்தவர், விவசாயக் கருத்தரங்கொன்றை நடத்திக் கொண்டிருந்தமையினால் போக முடியாமல் தனது உதவி அதிகாரியை அனுப்பி வைத்திருந்தார். பிற நாட்டு அறிஞர்களும், விஞ்ஞானிகளும் கலந்து கொண்ட அம்மகாநாட்டிலிருந்து அவர் இடையிலே பிரிய முடியாத நிலைமையிருந்தது,

கருத்தரங்கிலிருந்து திரும்பி மிகுந்த களைப்போடு மறுநாளைய ஆய்வறிக்கையைத் தயாரித்துக் கொண்டிருந்தவரை டெலிபோன் மணி உலுப்பி எழ வைத்தது.

பொது நிர்வாக அமைச்சிலிருந்து அந்த அவசரமான செய்தி வந்தது. 'அரசாங்கக் காரிலே உடனேயே கொழும்புக்கு வரவும். பொய்கையூரின் புனித அரசமரம் திட்டமிட்ட முறையிலே சேதப்படுத்தப்பட்டது பற்றிய உமது அவதான அறிக்கையைத் தவறாமல் கொண்டு வரவும்— பொது நிர்வாக அமைச்சர்'

அரசாங்க அதிபர் மணிக்கூட்டைப் பார்த்தார். இரவு பன்னிரெண்டு பத்து. அவரது கார்ச் சாரதி ஆறு மணியோடு வீட்டிற்குப் போய் விட்டான்.

இவர் மனைவியிடம் விஷயத்தைச் சொன்னார். சூட்கேசை அடுக்கினார். தானே காரை ஓட்டிக் கொண்டு வீதிக்கு வந்தார். பிறகு காரை நிறுத்திவிட்டு கொஞ்ச நேரம் யோசித்தார். பின்பு பொய்கையூரை நோக்கிக் காரை செலுத்தலானார்.

பொய்கையூருக்கு அரசாங்க அதிபர் ஏற்கனவே ஒரு முறை சென்று வந்தது மங்கலாகவே அவருக்கு ஞாபகத்தில் இருக்கின்றது. இன்று சென்றபோது நல்ல நிலவு. காரை நிறுத்திவிட்டு அரசமரத்தடிப் பக்கமாகச் சென்றார். அரசமரம் தெற்குப் பக்கத்திலே சில கிளைகளினை இழந்து போய் நின்றது.

அவர் அரசமரத்தடியில் நின்று ஒற்றையடிப் பாதையினைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்....

அரசமரத்தின் இடது புறத்திலே குளம், வலது புறத்திலே அரசமரத்துக்கு கொஞ்சம் இடைவெளி விட்டுப் பரந்திருக்கின்ற வயல்வெளியின் பின்னணியிலே தெரிகிற பரட்டைக்காடு, அதன் பின்னேயுள்ள பொய்கையூர். முற்றிலும் அடைக்கப்பட்டுள்ள இந்தக் கிராம மக்கள் எந்த வழியாக வெளி உலகுக்கு வருவார்கள்? அவரது கேள்விக்குப் பதில் சொல்லிக்கொண்டு அந்த ஒற்றையடிப்பாதை பாம்பாகி நீண்டு கிடக்கின்றது.

அவரது மனச்சாட்சியிலே அந்தக் கிராமத்துக்கு நிச்சயம் அரசமரத்தை வெட்டிய பின்னரே ஒருபாதை நிர்மாணிக்கப்படும் என உறுதியாகத் தெரிந்தது. கடந்த சில நாட்களாக இப்பத்திரிகைகளும், பௌத்த சமயத்தவர்களும் உரக்க அலறியதெல்லாம் எவ்வளவு தவறான தரவுகளால் உண்டாக்கப்பட்டவை என்பதை தன்னால் இயன்ற

அளவு அமைச்சருக்கு தெளிவுபடுத்த வேண்டும் என அரசாங்க அதிபர் மனதினுள்ளே தீர்மானித்துக் கொண்டார்.

காலையில் பொய்கையூர் அரசமரம் பற்றிய கோப்பினை அவசர அவசரமாகத் தயாரித்துக் கொண்டார் அரசாங்க அதிபர்.

இரவு முழுவதும் நித்திரை இல்லாமையினால் கண்கள் எரிந்து உடல் நொந்தவாறிருந்தது. அமைச்சரோடு விவசாயக் கருத்தரங்கு பற்றியும் பேச வேண்டுமென்று நினைத்து, அதற்கான கோப்பையும் எடுத்துக் கொண்டார்.

அமைச்சரது அறையுள் நுழைந்த அரசாங்க அதிபர் அமைச்சரைப் பார்த்துப் புன்னகை செய்தார். மறுகணமே திடுக்கிட்டுப்போனார். அமைச்சரின் முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது. அறைக்குள்ளே சென்ற அரசாங்க அதிபரைக் கொஞ்சநேரம் உறுத்துப் பார்த்தார் மந்திரி. பின்னர் 'இன்டர்கம்'மில் அடுத்த அறையிலிருந்த தனது செயலாளரை அழைத்தார். செயலாளர் அரசாங்க அதிபரது 'பேர்சனல் பைலு'டன்அறைக்குள் வந்தவர், வெறுப்புமிழ அரசாங்க அதிபரைப் பார்த்து வீட்டு கதிரையில் உட்கார்ந்து கொண்டார். வேண்டா வெறுப்பான குரலிலே அரசாங்க அதிபரை எதிரேயுள்ள கதிரையைக் காட்டி அமரும்படி சொன்னார் அமைச்சர். மனதினுள் நிறைந்த வெறுப்போடும், ஆத்திரத்தோடும், இனந்தெரியாத பயத்தோடும் உட்கார்ந்து கொண்டார் அரசாங்க அதிபர்.

"உன்னால் எங்கள் அமைச்சுக்கு எவ்வளவு அபகீர்த்தி ஏற்பட்டிருக்கிறது என்று உனக்குத் தெரியுமா? நீ மிகவும்

செயல் திறனற்றவனாயிருக்கிறாய். உன்னுடைய மாவட்டத்தின் பாரதூரமான விஷயங்களைப்பற்றி எந்த விதமான கவனமோ அக்கறையோ இல்லாமலிருக்கிறாய். இப்போது தேசியப் பிரச்சினை ஒன்றினை உருவாக்கியிருக்கிறாய்.... உன்மேல் எல்லா அமைச்சர்களும் மிகுந்த ஆத்திரத்தோடு உள்ளனர். உன்னை என்னுடைய அமைச்சரின் கீழ் கடமையாற்றுகின்ற ஒரு அதிகாரி என்று சொல்லவே எனக்கு அவமானமாகவும், எரிச்சலாகவும் உள்ளது....''

பொழிந்து தள்ளிய அமைச்சர், செயலாளரைப் பார்த்தார். அந்த அமைச்சிலே விஷயங்களைத் தீர்மானிப்பது செயலாளரே என்பது யாவருக்கும் தெரிந்த ரகசியம்.

செயலாளர் அமைச்சரைப் பார்த்து, ''நீங்கள் சொன்னது யாவுமே சரி...அதைவிட முக்கியமான காரியம், பொய்கையூர் அரசமர விவகாரம் நடந்து கொண்டிருக்கையில் அந்தப் பக்கம்கூட இவர் போகாமல் இருந்தது. அங்கிருந்து அனுப்பப்பட்ட சி. ஐ. டி. அறிக்கைகளிலே இவை முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிச்சயம் ஒன்றில் இது விஷமத்தனமாயிருக்க வேண்டும். இது மிகவும் பாரதூரமான விஷயம். மந்திரிசபைக் கூட்டத்திலே இவரை உடனே 'சஸ்பெண்ட்' செய்ய வேண்டும்என்று அனைவரும் அபிப்பிராயம் தெரிவித்ததாக நீங்கள்தான் கூறினீர்கள்?'' என்றார்.

அமைச்சர் மனந்தளர்ந்து போனவராய், குழப்பமான நிலைமையிலே யோசித்துக் கொண்டிருந்தார். நேற்று அவரது வீட்டிலே மகனும் மகளும் குடிவெறியில் வந்து செய்த கலாட்டா திடீரென்று அவரது மனதினுள்ளே புகுந்து கொண்டது. பதினேழு வயதிலேயே மகள் போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்டதற்கும், கிளப்புகளில் சுற்றுவதற்கும் யார் பொறுப்பு என்று அவரது மனைவி சத்தம் போட்டாள். உடனே இன்னும் போதை மயக்கம் தீராத மகன், தாயைப் பற்றி பச்சைப் பச்சையாகச் சொன்னான். அவரோ அதிர்ந்துபோய் விட்டார்.

அதற்குப் பிறகு அவளால் எதுவுமே பேச முடியவில்லை. இவருக்கு எல்லாமே வெறுத்தாற்போலிருந்தது. நித்திரைக் குளிகையைப் போட்டுக் கொண்டு படுத்தவர் காலையில் எழுந்தபோது ஒரே அலுப்பாகவும் சினமாகவும், எதிரே யுள்ள சகல பொருட்களினதும் மீது ஆத்திரமாயுமிருந்தது.

''அந்த அரசமரம் பற்றிய அறிக்கையைக் கொண்டு வந்திருக்கிறாயா? செயலாளரிடம் கொடு. இப்போது நான் அவசரமாகப் புறப்பட வேண்டும். பிரதமரைப் பார்த்துப் பேச உள்ளேன். நீ செயலாளர் சொல்வதின்படி நடக்க வேண்டும். அவரிடம் எல்லா விஷயங்களையும் சொல்லி யுள்ளேன். உள்துறை, கலாச்சார அமைச்சகங்களுக்கு நீ செல்ல வேண்டுமா இல்லையா என்பதையும் செயலாளர் உனக்குச் சொல்லுவார். ஆனால் முக்கியமான விஷயம், தேசிய மட்டத்தில் வருகின்ற பிரச்சினைகள் கூர்மை யடைந்தால், முதலில் அதற்குப் பொறுப்பான அதிகாரி யின் தலையே உருளும் என்பதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்...''

அமைச்சர் ஜூஸ் குடித்துவிட்டு எழுந்து வெளியே நடந்தார். மனதினுள்ளே நிறைந்திருந்த எரிச்சல் மௌனத்திலே தெரிந்தது. நடையின் தளர்விலே ஒலித்தது. தாயைப் பற்றி மகன். சொன்ன அவதூறுகள் மூளையைக் குடைநதுகொண்டிருந்தன. அவமானமாயிருந்தது. வயிற் றைக் குமட்டிற்று. அவனை நிமிர்ந்து பார்க்க முடியாத தலைக்குனிவாயிருந்தது.

மயிலர் தனக்கும் மற்ற ஆறு பேருக்கும் ஒருவார காலத்திற்கான 'றிமாண்ட்' என்று நீதிபதி சொன்னதும் திகைத்து மயங்கி விழுந்துவிட்டார். அவருக்காக அட்வக்

கேட்,கடுமையாயும் நீண்ட நேரமாயும் வாதாடியும்பயனில்லாம, போயிற்று.

நீதிபதி தனது பதவி உயர்வை எதிர்பார்த்திருப்பவர். பத்திரிகைகளில் இச்செய்தி எத்தகைய வீச்சோடு அலசப்பட்டதென்பதை அறிந்திருந்தவர். இதெல்லாவற்றையும் விட நீதி அமைச்சின் செயலாளர் வேறு அவரோடு பேசுகிறபோது, "இது புத்த சமயத்திற்கு எதிரான ஒரு அட்டூழியம் என்று அமைச்சர் அபிப்பிராயப் படுவதாக" கூறினார். எல்லாவற்றையும் யோசித்து நீதிபதி இப்போதே வழக்கைப்பற்றி முடிவெடுத்து விட்டார். இந்த வழக்கில் கொடுக்கப்படும் தீர்ப்பின் மூலமாக தனது எதிர்காலம் எவ்வளவு பிரகாசம் வாய்ந்ததாயிருக்கும் என்ற கற்பனை அடிக்கடி அவரின் மனதிலே தோன்றிக் கொண்டிருந்தது.

## ஏழு

மயிலரின் பேரனான மனோகரனுக்கு என்னதான் செய்வதென்றே தெரியவில்லை. பயமும் கவலையும் ஏக்கமும் நிறைந்திருந்த மயிலரையும், ஏனையோரையும் 'றிமாண்ட்' சிறையில் பார்த்தபோது அவனும் செல்லத்துரை வைத்தியரும் திகைத்தே போய்விட்டார்கள்.

"அப்பூ, ஏன் அப்பு இப்ப அழுகிறீங்கள்? நீங்கள் ஒண்டுக்குமே அழவேண்டாம்....அடுத்த தவணையிலே உங்களை கோர்ட்டிலை பிணைதந்து வெளியாலை விட்டிடுவாங்கள்...அதைப் பற்றியெல்லாம் நீங்கள் யோசித்துக் கவலைப்படாமல் இருங்க...வைத்தியர் அப்பு, அப்புக் காத்தரோடை எல்லாவற்றையும் சரியாகக் கதைச்சிருக்கிறார்..."

மயிலர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

''இவ்வளவு காலமும் ஒரு சின்னக் கெட்ட பேர் கூட எனக்கு வந்ததில்லை. அந்திம காலத்திலை இப்படி மறியலுக்கு வரவேண்டியதாய்ப் போச்சுது...ஏதோ முற்பிறப்பிலை செய்த கறுமமாயிருக்க வேணும்...பாவம், இந்த இளந்தாரியளும்...கொஞ்சமும் இரக்கமில்லாமல் என்ன அடி அடிக்கிறார்கள்....இந்த அடியளையெல்லாம் அடிச்சுப் போட்டு பிறகு கடவுளைப் பற்றியெல்லாம் கதைக்கிறாங்கள்...''

''மயிலு...என்னவோ நடந்ததெல்லாம் நடந்து போச்சுது...நல்லாக யோசித்துப் பார்த்தால் இதெல்லாம் பெரிய அட்டூழியம் என்றுதான் தெரிகிறது. இவ்வளவு சனமுள்ள ஒரு கிராமத்துக்கு முக்கிய தேவையான றோட்டுப் போட்டுத் தர மறுத்த 'கவண்மென்ற்' இப்ப எவ்வளவு ஆயிரம் ரூபாவை இந்த அரசமரத்தைப் பாதுகாக்க வெண்டு செலவழிக்குது. அந்த அரசமரத்துக்கு இப்ப வைத்தியமும் நடக்குது. தாவர இயல் சம்பந்தமான நிபுணர்கள் அந்த அரசமரம் பட்டுப் போகாமலிருக்கிறதுக்காக நிறைய முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறதை இண்டைக்கும் நான் கண்டு கொண்டுதான வந்தனான். அரசமரத்துக்கு ஊசிகூடப் போடப் போறாங்களாம்...''

வைத்தியர் செல்லத்துரை கவலையோடு சொன்ன வார்த்தைகள் மயிலரின் இதயத்தை உலுப்பின.

''வைத்தியர் ஐயா, உண்மையிலை பார்க்கப் போனால் அந்த அரசமரம் எனக்குத்தான் உரித்தானது. ஏனெண்டால் அது என்னுடைய பரம்பரைக் காணி. அந்தப் பரம்பரைக் காணியிலைதான் இந்த அரசமரம் நிற்குது. ஊர் நன்மைக்காக, அந்த அரசமரம் நிற்கிற காணியை அப்பு, பாதைக்காக என்றுதான் விட்டுக் குடுத்தவர். இப்ப இந்தப் பொலிஸ்காரன் வந்து அது புத்தர் இருந்த மரம்

எண்டு சொன்னால் அது எப்பிடி? நானும் அறுபது வருஷ காலமாகப் பார்க்கிறன்...ஒரு நாளெண்டாலும் அந்த மரத்துக்கு கீழே புத்தர் வந்து இருந்ததைக் காணவில்லை.'' இந்த விஷயங்களை அப்புக்காத்தர் ஐயாவிட்டையும் கொஞ்சம் சொல்லி விடுங்க. அநியாயமாகப் பொய் சொல்லி எங்களை வதைக்கிறாங்கள்!''

செல்லத்துரை வைத்தியர் கண்களை இடுக்கிக் கொண்டு மெல்லச் சிரித்தார்:

''மயிலு, விஷயம் அப்பிடியில்லை. புத்தர் இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தி இந்தியாவிலை பிறந்த ஞானி. அவர்தான் புத்தசமயத்தை உண்டாக்கினவர். சிங்களவரிலை அதிகமான ஆட்கள் புத்த சமயத்திலை இருக்கிறவர்கள். புத்தர் அரசமரத்துக்கு கீழேயிருந்து தவம் செய்து ஞானம் பெற்றவர். ஆனபடியால் அரசமரமும் புனிதமானது. அதை வெட்டுறது குற்றம்''

மயிலர் சங்கரனைப் பார்த்தார்.

''இதெல்லாம் எனக்கு விளங்காது ஐயா. நான் சொல்லவாறதென்னென்றால் அரசமரம் என்னுடைய சொத்து. அதை நான் ஊர் நன்மைக்காகத்தான் வெட்டியிருக்கிறன்...அதை எப்பிடி ஐயா பிழையெண்டு சொல்ல முடியும்?...வேப்ப மரங்களுக்கு கீழை வைரவசாமியிருக்கிறார்.. அதை வெட்ட மட்டும் ஏன் ஐயா அரசாங்க உத்தரவு தேவையில்லை?''

செல்லத்துரை வைத்தியர் கொஞ்சநேரம் பேசாமல் நின்றார். பின்னர் மெதுவாகச் சொன்னார்.

''மயிலு, நீ சொல்லுறதெல்லாம் மனச்சாட்சிப்படியும் நியாயப்படியும் சரியான விஷயந்தான். ஆனால் நடைமுறை வேறை மாதிரி இருக்குது. இலங்கையிலே சட்டப்படி புத்தமதந்தான் அரசாங்க சமயம். அதற்கு நிறைய சலுகைகளும், பாதுகாப்பும் உள்ளன...ஆகையாலைதான்

அரசாங்கம் ஒரு சட்டமே இயற்றி இருக்குது. அதன்படி அரசமரம் அரசாங்கக் காணியிலை இருந்தாலுஞ்சரி, தனியார் காணியிலை நின்றாலும் சரி அதெல்லாம் அரசாங்கத்திற்குரிய சொத்து. அதை வெட்டுவதோ சேதப்படுத்துவதோ தண்டனைக்குரிய குற்றம். ..

செல்லத்துரை வைத்தியர் சொல்லிக் கொண்டிருக்கும் போது சிறைக் காவலர்கள், இனிப் பார்வையாளர்கள் அங்கிருந்து போகலாம் எனத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

மனோகரனுக்கு தன்னெதிரே தெரிந்த காட்சியினைக் கண்டதும் என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அரசமரத்தைச் சுற்றி இப்போது பெரிய முள்வேலி போடப்பட்டிருந்தது. ஒரு எல்லை—மயிலரின் வயல் வரம்பின் உட்புறத்தின் உள்ளும், இன்னொரு பக்கம் குளத்தங் கரையினைத் தொட்டும் மற்ற இரண்டு பக்கங்களும் ஒற்றையடிப்பாதையாய் விரிந்திருக்கின்ற பகுதியை விழுங்கியுமிருந்தன.

அந்தக் கிராமத்து மக்கள் வெளியுலகிற்குச் செல்ல இருந்த குச்சு வழியையும் இப்போது அந்த நாற்சதுர முள்வேலி முற்றாகவே மறைத்து அடைத்து நின்றது.

மனோகரனுக்கு இந்தச் செய்கை வடிகட்டிய அயோக்கியத்தனமாகத் தெரிந்தது. செல்லத்துரை வைத்தியரைப் பார்த்தான்.

"இந்த ஒற்றையடிப் பாதையை கொஞ்சம் அகட்டி வீதியாக்கிறதுக்கு பணம் கேட்டால் அதுக்கு கைவிரிச்ச

அரசாங்கம், இந்த அரசமரத்தைப் பாதுகாக்கிறதுக்கு எவ்வளவு ஆயிரம் ஆயிரமாகப் பணத்தைக் கொட்டி செலவழிக்குது...''

செல்லத்துரைவைத்தியரின் குரலிலே, இத்தகைய கசப்புத் தொனிப்பதை இன்றுதான் முதன் முதலாகவே கேட்கிறான் மனோகரன்.

''அரசமரத்துக்குக் கீழை பிள்ளையாரும்தான் இருக்கிறார். அந்தப் பிள்ளையாரையே நாங்கள் மிகவும் பத்திரமாகத் தூக்கி வேறை இடத்திலை வைத்திருக்கிறம்....இந்த இடத்திலை புத்தரைக் கும்பிடுறதுக்கு ஒரு சிங்கள மனிஷன் கூட இல்லை. அப்படியிருந்தும் இப்படியொரு பாதுகாப்பு. இது மற்றச் சமயத்தவனெல்லாரையும் இரண்டாவது மூன்றாவது தரத்திலை வைத்து அவமதிக்கிற மாதிரி இருக்கிறது...என்ன வெட்கக்கேடான அவமானம் இது...''

மனோகரனுக்கு அவர் சொன்னதிலே பாதி புரிந்தும், பாதி புரியாததுமாயிருந்தது. ஆனாலும் இது ஒரு பாரபட்சம் நிறைந்த அயோக்கியத்தனம் என்று மட்டும் அவனது மனம் சொல்லிக்கொண்டிருந்தது.

''எப்படியிருந்தாலும் இந்த முள்ளு வேலியை முதலிலை பிடுங்கியெறிய வேண்டும். இந்த ஊரிலை உள்ளவர்கள் எல்லாரையும் வெறும் மடையன்கள், எதைச் செய்தாலும் கேட்டு சகித்துக்கொண்டிருப்பதாகவேதான் இந்த அரசாங்கம் நினைச்சுக் கொண்டிருக்கிறதாக்கும்! பொறுத்திருந்துதான் எங்களைப்பற்றி இவைகள் நல்லாத் தெரிந்துகொள்ளுவினை...''

## எட்டு

செல்லத்துரை வைத்தியர் மனோகரனையுங் கூட்டிக் கொண்டு எம். பி. யினுடைய வீட்டுக்குச் சென்றார். செல்லத்துரையைக் கண்டதும் எம். பி. யினுடைய முகம் லேசாகக் கருமை கண்டு மீண்டும் வழமைக்குத் திரும்பியது.

''என்ன வைத்தியர் திடீரென்று இந்தப்பக்கம்? இதார் மற்றது? பொய்கையூர் தானோ?''

செல்லத்துரை சொன்னார். அவர் சொல்வதற்காகவே காத்திருந்தவர் போல சள்ளென்று பாய்ந்தார் எம். பி:

''வைத்தியர், விஷயம் தெரிஞ்ச நீரென்றாலும் அந்த மயிலுவுக்கு விஷயத்தைச் சொல்லியிருக்கக் கூடாதோ? இந்த அரச மரத்தை தந்திரமாக வெட்டி, பொய்கையூருக்கு றோட்டுப் போட்டுத்தர, நான் படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறன் ... அதெல்லாத்தையும் இப்ப மயிலர் பாழாக்கிப்போட்டார்....என்னோடு இதைப்பற்றி ஒரு கதையாவது கதைச்சிருக்கலாந்தானே...''

செல்லத்துரை நாடியை வருடிக்கொண்டார்....

''ஐயா, நாங்கள் எத்தினையோ தரம் உங்களுக்கு இதை எடுத்துச் சொல்லியிருக்கிறம். எத்தனையோ பெட்டிஷன்களை அரசாங்கத்துக்கும் அனுப்பியிருக்கிறம். ஆனால் எதுவுமே நடந்ததாய் இல்லை...அதெல்லாம் பழைய கதையாகிப் போச்சுது ஐயா....நான் இப்ப உங்களிட்டை வந்ததெல்லாம் அதுக்காக இல்லை.... எங்களின்ரைகிராமத்தை சுத்தி இப்பமுற்றாகவே வேலி போட்டு அடைச்சிருக்குது. ஊருக்குள்ளை போக வழியே இல்லை....வயல் வெளிகளுக்குள்ளாலை இடறி விழுந்து தான் ஐயா நாங்கள் உங்களிட்டை வந்தனாங்கள்.... இந்தமுள்ளுவேலியை எடுத்துவிட்டுப் பழையபடி ஒற்றையடிப்பாதையிலை நாங்கள் புழங்கிறதுக்கு

நீங்கள்தான் ஐயா உதவி செய்ய வேணும்.... அதோடை மயிலர் ஆட்கள் வேறை மறியலிலை இருக்கிறாங்கள்...."

எம். பி. தனது முகத்தை அஷ்ட கோணலாக மாற்றிக் கொண்டு, கழுத்திலே கிடந்த தங்கச் சங்கிலியை வருடியவாறே யோசித்துக் கொண்டிருந்தார். எல்லாவற்றையும் உள்ளே நின்று கவனித்துக் கொண்டிருந்த எம்.பி.யின் மனைவி அவரை உள்ளே அழைத்தாள்.

"டொக்டர் உங்களுக்கு என்ன சொன்னவர்? உங்களுக்கு இரத்தக் கொதிப்பு இருக்கிறதாலை எதையும் கண்டபடி யோசிக்கக்கூடாது என்று அல்லவோ 'அட்வைஸ்' பண்ணினவர். அவங்கள் என்னவோ சொல்ல, நீங்கள் யோசிக்க.... நல்லகூத்தாய் இருக்குது. அவங்களை உடனே போகச் சொல்லி நீங்கள் சொல்லுகிறீர்களோ, அல்லது நானே வந்து சொல்லவோ?"

எம். பி. குசுகுசுத்தார்:

"'ராணி, மெதுவாகப் பேசும்.... அவங்களுக்கு கேட்டிடும்... போனமுறை அவங்களாலைதான் 'எலெக்ஷன்" வெற்றி பெற்றனான்... நான் சமாளிச்சு அனுப்புகிறேன்.... நீர் உள்ளை போய் கொஞ்சம் 'ஜூஸ்' போடும்"

செல்லத்துரையின் முகத்திலே ஏளனமாகச் சிரிப்பு மிதந்தது. வெளியே வந்த எம். பி. யை சலனமற்றவராகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"மருந்து சாப்பிடுற நேரம். அதுதான் மிஸிஸ் கூப்பிட்டவா... உள்ளை போய்ச்சாப்பிட்டிட்டு வருகிறேன்..."

ஒன்றுமே பேசவில்லை செல்லத்துரை.

'என்னைப் பொறுத்தவரை உங்களினுடைய ஊர் என்னுடைய பிறந்த ஊர் மாதிரி. இந்தப் பிரச்சினையிலை உயிரைக் கொடுத்தாயினும் உங்களுக்கு உதவி செய்வேன்.... ஆனால் எந்த மந்திரியும் என்னோடை முகங் கொடுத்துக் கதைக்கிறானில்லை... பாராளுமன்றத்திலை

பேச எழுப்பினால் நிச்சயமாக அரசாங்கக் கட்சி எம்.பி.க்கள் மட்டுமில்லை, எதிர்க் கட்சியிலுள்ள பௌத்தசமய எம்.பிக்கள் கூட சத்தம் போட்டு தடுத்திடுவாங்கள்...பிறகு என்னுடைய தேர்தல் தொகுதிக்கு எதையுமே செய்ய முடியாமற் போய் விடும். இதைப் பெரிய இனப்பிரச்சினை ஆக்கிவிட்டாங்கள்...'

செல்லத்துரைக்கு பத்திரிகைச் செய்திகள் நினைவுக்குள் வந்து சுழன்றன.

''நானும் பேப்பரிலை எல்லாம் படிக்கிறன் தான் ஐயா. ஆனால்.... பயமில்லாமல் நீங்க உள்ள நிலைமைகளைப் பார்லிமெண்டிலை சொல்லுங்கள் ஐயா.... எல்லாரும் அரசமரத்தைப் பற்றித்தான் பேசிறாங்கள்.... எங்கடை ஊரிலையுள்ள நூற்றி முப்பத்தியாறு குடும்பத்திலையுள்ள எழு நூற்றிச் சொச்ச உயிரைப்பற்றி யாருமே அக்கறைப் படேல்லை. புத்தர் அன்பையும், சமாதனத்தையும் தானே ஐயா போதித்தார்....? அவர் இப்ப உயிரோடை இருந்திருந்தால் இந்த அரசமரத்தை வெட்டுறதுக்கு அவர்தான் ஐயா முதலாவது கோடாலியை எடுத்து வெட்டியிருப்பார்... இதையெல்லாம் நீங்க சொல்லுங்க ஐயா...''

செல்லத்துரை ஆவேசமாகிவிட்டார். அதே வேளை மீண்டும் எம். பி.க்கு உள்ளேயிருந்து திருமதி எம்.பியின் அழைப்பு வந்தது. போனவர் போன வேகத்திலேயே திரும்பி வந்து, ''வைத்தியர், நீங்க ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். நான் உங்களோடை தொடர்பு வைக்கிறன். ...எனக்கு இன்றைக்கொரு 'மெடிக்கல் செக்அப்' இருக்குது. நான் புறப்பட வேணும்... மயிலுவையும் மற்றவையையும் நான் விசாரித்ததாகச் சொல்லி விடுங்க...'' என்று அவசரமாகக் கூறியபடியே உள்ளே போய் விட்டார்.

**வா**மதேவன் செல்லத்துரையைக் கண்டதும் ஆர்வத் துடன் வரவேற்றார். பின்னர் கவலை தோய்ந்த குரலிலே, ''அட்வக்கேட்டோடை எல்லாம் கதைத்திருக்கிறேன். அடுத்த தவணையிலை எல்லாரையும் பிணையிலை எடுத் திடமுடியும் என்று சொல்லுகிறார்... நான் அரசமர விஷயம் பறறி எல்லாருக்குமே தந்திகள் கொடுத்திருக் கிறேன். நாளைக்கு பொய்கையூருக்கு வர இருக்கிறேன்....'' என்றார்.

பின்னர் உள்ளே போய் தான் கொடுத்த தந்திகளின் பிரதிகளைக் கொண்டு வந்து காட்டினார். பிரதம மந்திரி, கலாச்சார அமைச்சர், எதிர்க்கட்சித்தலைவர், தொகுதி எம். பி. ஆகியோருக்கு நீண்ட நீண்ட வார்த்தைகளிலான தந்திகள்.

செல்லத்துரைக்கும், மனோகரனுக்கும் மனதிலே இலேசான நெகிழ்ச்சியும், சந்தோஷமும் உண்டாயிற்று.

''இந்தப் பிரச்சினையை இந்த அளவுக்கு வளரவிட்ட தற்கான பொறுப்பை எங்களினுடைய எம். பி. தான் ஏற்றுக் கொள்ளவேண்டும். முட்டாள்த்தனமாக; பேசாம லிருந்து விட்டதால் வந்த வினை.... இப்ப இதைச் சொல் லிப் பிரயோசனமில்லை... பொய்கையூர் ஆட்களெல்லாம் ஒன்றாய் நின்று போனமுறை 'எலக்ஷனி'லை எனக்கு வாக்களித்திருந்தால் இன்றைக்கு இந்த நிலைமை வந்திருக் காது... சரி அதெல்லாம் போன கதை.... இனியாவது நீங்கள் யோசித்து நடந்தால் சரி...''

''ஐயா, இப்ப உள்ள நிலைமை இதுதான். நீங்களே வந்து பார்த்தால் தெரியும். பொய்கையூரிலையிருந்து வெளியாலை வாறதுக்கிருந்த ஒரே ஒருவழி அப்பிடியே முள்ளுவேலி போட்டு அடைக்கப்பட்டிருக்கிறது. அரச மரத்தைச் சுற்றி பெரியமுள்ளுவேலியை 'கவண்மென்ற்' போட்டிருக்குது.... மயிலருடைய வயல், குளத்தங்கரை வரைக்கும் வேலி அகண்டு போயிருக்குது. மனிதரும்

பாதையைப் புழங்கேலாது.... மாடு கன்றும் தண்ணீர் குடிக்க முடியாது... அவதியாக இருக்குதையா...."

வாமதேவன் பிடரியைத் தடவிக் கொண்டார்.

"வெள்ளப் பெருக்கெடுத்த அன்றைக்கு நான் அங்கு வந்து பார்த்தபோதே என்னுடைய மனதிலை அரசமரத்தை வெட்ட வேணுமென்று யோசினை இருந்தது.... ஆனால் என்ன செய்யிறது.... நான் துளிதன்னும் அதிகார பலம் இல்லாத சாதாரண தொண்டன்.... தேர்தல் நாளான அந்த ஒரு நாளிலை நீங்கள் விட்ட தவறு எவ்வளவு பயங்கரமான விளைவுகளையெல்லாம் கொண்டு வந்திருக்கிறதென்று பார்த்தீர்களா?"

செல்லத்துரை தயக்கத்தோடு கேட்டார் :

''அதெல்லாம் சரி ஐயா.... இனி நாங்கள் என்ன செய்ய வேணும்? ஏதாவது செய்தால்தானே ஒரு முடிவு வரும்..."

வாமதேவன் கொஞ்ச நேரம் யோசித்தார். பின்னர் அங்குமிங்குமாக எழுந்து நடந்தார்.

"ஒரே ஒரு வழிதான் இருக்குது, இந்த முள்ளு வேலியை உடனே அகற்ற வேணுமென்று பெரிய சத்தியாக்கிரக இயக்கம் ஒன்றை அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு முன்னாலை நடத்த வேண்டும். இதை அவர் அரசாங்கத் திற்கு அறிவிக்கட்டும். பிறகு உண்ணாவிரத இயக்கத்தை ஆரம்பிக்கலாம்.... இந்த இயக்கத்தை நானே முன்னின்று ஆரம்பித்து வைக்கிறேன்...."

செல்லத்துரையின் முகத்திலே யோசனை சூழ்ந்திருந் தது. மோவாயைத் தடவிக் கொண்டார்.

''எவ்வளவு பேர் வேணும், அப்படியெல்லாம் செய் யிறதுக்கு? நாளாந்த உணவுக்கே கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கிற ஊர் ஆட்களை நகரத்துக்குக் கூட்டிக் கொண்டு

போக எவ்வளவோ பணம் தேவைப்படுமே. ஐயா... கிராமத்து ஆட்களை உங்களுக்குத் தெரியுந்தானே... அதுவும் வெள்ளம் வந்ததுக்குப் பிறகு ஊரெல்லாம் ஒரே பஞ்சமாயிருக்குது.... சனங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்துப் போய் பரிதவிப்பிலை இருக்கிறாங்கள்''

வாமதேவன் கொஞ்சநேரம் மௌனமாயிருந்தார்.

''இதை இனி ஒரு அரசியல் பிரச்சினையாக்கினால் தான் பிரச்சினை தீரும் போலை இருக்குது....'' என்று முணுமுணுத்தவர், "நாங்கள் தமிழராயிருக்கிறதாலை தானே இப்பிடி அநியாயமொன்றை எங்களுக்கு மேலை இந்த அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. நான் நல்லாக யோசித்து இதைப்பற்றி ஒரு முடிவு சொல்கிறன். ஆனால் நடுத்தர வயதிலை உள்ள ஐம்பது பேரை நீங்கள் இந்த சக்தியாக்கிரக இயக்கத்திற்காக எனக்கு அடுத்த திங்கட்கிழமைக்கு இடையிலே தந்தே ஆகவேணும்....''

மனோகரன் செல்லத்துரையைப் பார்த்தான்:

''ஐயா, உடனடியாக ஏதாவதொருகாரியம் செய்தேயாக தான் ஆகவேணும்... ஊருக்குள்ளையிருந்து எப்படியும் ஒரு ஐம்பது பேரையாவது கூட்டிக் கொண்டு நகரத்துக்குப் போய் சத்தியாக்கிரகம் செய்யுறதுக்கான ஒழுங்குகளை வைத்தியர் அப்புதான் செய்ய வேணும்... பிறகு ஆறின கஞ்சி பழங்கஞ்சியாகிப் போய்விடும் ஐயா....''

''சரியாய்ச் சொன்னாய் தம்பி. உன்னைப் போலை உற்சாகமான ஆட்கள்தான் இப்ப தேவை... இளந்தலை முறைதான் தைரியமாகப் போராடுகிற வல்லமை கொண்டது நீ, நான் சொன்னபடி செய்திடு....''

செல்லத்துரையினது முகம் இன்னமும் வழமைக்குத் திரும்பவில்லை. யோசனையில் ஆழ்ந்திருந்தது.

''இளங்கன்று பயம் அறியாது... நீ எதையும் சொல்லலாம் தம்பி. ஆனால் ஐம்பது பேரை நகரத்துக்குக் கூட்டிக்

கொண்டு போறது சரி.... அவர்கள் எல்லாரையும் எங்கே தங்க வைக்கிறது? சாப்பாட்டுக்கு யார் பணங்கொடுக்கிறது? அதுக்கெல்லாம் எங்களிடம் வல்லமை இருக்கிறதா? இதையெல்லாம் யோசிச்சுப் பார்..."

செல்லத்துரையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த வாமதேவன் நிதானமான குரலிலே சொன்னார்:

"வைத்தியர்... உங்களுடைய மனதை நீங்கள் வீணாகக் குழப்பிக் கொண்டிருக்கத் தேவையில்லை. நான் பொய்கையூர்த் தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக இன்றைக்கே நிதி சேர்க்கும் இயக்கம் ஒன்றினைத் தொடங்கும் முயற்சியை ஆரம்பிக்கப் போறன். நீங்கள் எதுக்கும் யோசிக்க வேணாம். தம்பி சொன்னதுபோல் எனக்கு இரண்டுநாள் அவகாசத்திலை ஐம்பது பேரைச் சேர்த்துத் தாருங்க. உற்சாகமும், திடகாத்திரமும், அடிபிடிக்குப் பயமில்லாத துணிவும் உள்ள ஆட்களாயிருக்க வேணும்... காசைப் பற்றி யோசிக்கத் தேவையில்லை..."

செல்லத்துரைக்கு வாமதேவனின் மேல் இப்போது நம்பிக்கை பிறந்தது.

"சரி, ஐயா நீங்கள் சொன்னது போலவே நான் செய்கிறன்.... இப்போதே போய் அதற்கான ஒழுங்குகளைச் செய்கிறன்...."

அரசாங்க அதிபர் தனக்கு கீழே கடமையாற்றுகிற காணி அதிகாரிகள், பொய்கையூர்ப் பகுதியின் உதவி அரசாங்க அதிபர், கிராம சேவக அதிகாரிகள் ஆகியோரின் கூட்டத்தினை உடனடியாகக் கூட்டினார். இந்தச் சம்பவங்களை உடனேயே தமக்கு அறிவிக்காமைக்காக உதவி அரசாங்க அதிபர், கிராம சேவக அதிகாரி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி உள்துறை மந்திரி அலுவலகம் தம்மைப் பணித்துள்ளதாக அரசாங்க அதிபர்,

அந்தக் கூட்டத்திலே கூறினார். அதன்படி அவர்களிவரும் இருபத்தி நாலுமணி நேர அவகாசத்திலே மிகவும் பின் தங்கிய இடங்களிற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

''எனது வேலை—நிர்வாகமும், அபிவிருத்தியும். நான் இவற்றைச் செய்வதா, அல்லது ஒவ்வொரு அரசமரமாக அண்ணாந்து பார்த்துக் கொண்டு திரிவதா?'' என வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார் இடமாற்றதுக்குள்ளான அந்த உதவி அரசாங்க அதிபர்.

காணி அதிகாரி கொஞ்சம் துணிச்சலான இளைஞர். கடமையிலேயே கண்ணாயிருப்பவர். எந்த இடமாற்றத்தினையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிற பிரம்மச்சாரி. அதனாலேயே பல இடங்களிற்கும், மக்கள் விருப்பத்திற்கு எதிராக இடமாற்றம் செல்யப்பட்டவர்.

''சேர்... பொய்கையூர் என்னுடைய டிவிசனுக்குள்ளே தான் வருகிறது. நூற்றி முப்பத்தாறு குடும்பங்கள் வாழ்கிற ஒரு பின்தங்கிய இடம் இது. அந்த நிலம் முழுவதுமே அந்தக் கிராம வாசிகளுக்கு பரம்பரையாகவே சொந்தமானது. அதிலை அரசுக்குரிய காணியாக எதுவுமே இல்லை அந்தக் குளங்கூட தனியாளுக்குச் சொந்தமானதுதான். அஇதல்லாவற்றையும் விட அந்த அரசமரம் நிற்கிற காணி கூட தனியாளுடையது—தம்பு மகன் மயில்வாகனத்துக்கு உரியது. இதெல்லாமே பொய்கையூர்க்காணி ஒதுக்கீடு பற்றிய பைலிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது... இதையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு அந்தக் கிராமத்தையே சிறைக் கதவுகளாலை மூடி வைக்கிற மாதிரி முள்ளுவேலியாலை அடைக்கிறது எனக்குச் சரியாகத் தெரியவில்லை. நாங்களே சட்டத்தை மீறி நடக்கிற மாதிரி எனக்குத் தெரியுது...''

பைல்களின் தாள்களைப் புரட்டிக் கொண்டே காணி அதிகாரி தொடர்ந்தார்:

''கொழும்பில் உள்ள அதிகாரிகள் இந்தப் பிரச்சினைக்கு அரசியல் சாயம்பூசி ஆதாயந் தேட முயற்சிக்

கலாம். ஆனால் நாங்கள் உண்மை நிலைமைகளை அரசாங்கத்திற்குத் தெளியப்படுத்த வேண்டும். இதைப் பற்றி தெட்டத் தெளிவான ஆதாரபூர்வமான அறிக்கையை என்னாலே உங்களுக்குத் தரமுடியும்...''

உணர்ச்சி வசப்பட்டு சொல்லிக் கொண்டிருந்த காணி அதிகாரியை, மேலதிக அரசாங்க அதிபர் அனுதாபம் ததும்பப் பார்த்தார். ஆங்கிலத்திலே நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாகக் கூறினார்:

''மகேஸ்வரன், இந்த அரசமரம் இன்றைக்கு ஒரு இலங்கைப் பிரச்சினையாக, கொந்தளிப்பான பிரச்சினையாக மாறியதற்குப் பிறகு நாங்கள் மிக அவதானமாக நடந்து கொள்ளவேண்டும். 'பொய்கையூர் அரசமரத்திலை இனி ஒரு அரசமிலைக்கு சேதம் வந்தாலும், சிங்களப் பகுதியிலே வாழுகின்ற தமிழர் ஒருத்தருடைய கழுத்து அறுக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்' என்று புத்த பிக்கு ஒருவர் பேசின பேச்சை சிங்களப் பத்திரிகையிலை நான் வாசித்திருக்கிறேன்... அந்த சிங்களப் பத்திரிகை இன்றைய அமைச்சர் ஒருவருக்குச் சொந்தமானது. அதிக சிங்களவர்களால் படிக்கப்படுவது. அது எழுதும் ஒவ்வொரு எழுத்தும் அரசாங்கத்தையே மாற்றும் வலிமை உடையது.''

திடீரென்று மேலதிக அரசாங்க அதிபர் நாக்கைக் கடித்தவாறு சுதாரித்துக் கொண்டே, கூட்ட நிகழ்ச்சிகளைக் குறிப்பெடுக்கின்ற ஸ்டெனோ சரளாவைப் பார்த்தார்:

''மிஸ்...சரளா இதுவரை நான் சொன்ன விஷயம் எதுவுமே கூட்டக் குறிப்பிலே இடம்பெறத் தேவையில்லாதது. அவற்றை நீக்கிவிடு. அத்தோடு இந்தக் கூட்டக் குறிப்பு முழுவதையும் அரசாங்க அதிபருக்கு காட்டியதின் பிறகே அறிக்கையாக 'டைப்' செய்யக் கொடு....''

அரசாங்க அதிபரைப் பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்தார் மேலதிக அரசாங்க அதிபர்.

''பொய்கையூர் அரசமரத்தைப்பற்றி மகேஸ்வரன் சொன்னது யாவுமே உண்மைதான். அந்த விஷயத்திற்கும் அவரே பொறுப்பு என்பதும் ஏற்கக்கூடியதுதான். நான் வயதாலும் அனுபவத்தாலும் முதிர்ந்தவன் என்பதால்தான் இவற்றை எல்லாம் சொல்கிறேன். அரசாங்க அதிகாரி ஒருவனைத்தான் வெகு இலகுவாக அரசாங்கமும், அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் கழுத்தை உருட்டிவிட முடியும்; விலாசமே இல்லாமல் தொலைத்துவிடவும் முடியும்....'' அவர் தொடர்ந்து கூறினார் :

''அதிகாரிகள் தமக்கெதிராகப் பேசினால், அவர்கள் பேசுகிற உண்மைக்காகவே அந்த அதிகாரிகளை முற்றாகத் தீர்த்துவிடவும் ஒரு அரசினால் முடியும். அதெல்லாம் அரசுக்கு பெரிய விஷயமில்லை.''

காணி அதிகாரி மகேஸ்வரன் மெலிதான ஏளனத்தோடு அவரைப் பார்த்தான்.

''நீங்கள் அனுபவசாலி. இங்குள்ள எல்லோரிலும் நெடுநாள் அரசாங்க சேவையிலே உள்ளவர். இத்தகைய பிரச்சினையிலே என்ன வழிமுறைகளைக் கையாளவேண்டுமென்று சொல்கிறீர்கள்? அதைச் சொன்னால் எல்லாவற்றுக்கும் உதவியாக இருக்க முடியும்...''

எல்லா அதிகாரிகளையும் ஒருமுறை பார்வையினால் நோட்டம் விட்டார் மேலதிக அரசாங்க அதிபர்.

''இந்த அரசமர விவகாரத்திலே எடுக்கின்ற முடிவைப் பொறுத்துத்தான் அரசாங்க அதிபர் உட்பட மற்றும் எங்களில் அனேகருடைய எதிர்காலமே அடங்கியிருக்கின்றது என்பதை முதலில் மனதிலே வைத்துக் கொள்ளுங்கள்...அப்படியானல் இந்த விவகாரத்துக்கு என்ன பரிகாரம்? என்னோடு இதையிட்டு நீங்கள் உடன்படலாம் அல்லது முரண்படலாம். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எந்தப் பிரச்சினைகளையும் தீர்க்க இரண்டு பிரதான வழிகளே உள்ளன. ஒன்று பிரச்சனையின் வேரை அறிந்து அதற்கான தீர்வு காண்பது. மற்றது பிரச்சனை

களை அப்படியே ஊறப்போட்டு தானாகவே அதனைத் தீர்வு காணச் செய்வது. நான் சொல்வது இரண்டாவது வழி. நீங்கள் இந்த முள்ளு வேலியைப் பற்றி அலட்டிக் கொள்ளாதீர்கள். அது அப்படியே இருக்கட்டும். வேண்டு மென்றால் அதற்குள் புத்தர் பெருமானே வந்து உட்கார்ந்து கொள்ளட்டும்...சரளா, நீ என்ன எழுதிக் கொண்டிருக்கி றாய்....இவற்றையெல்லாம் குறித்துக் கொள்ளாதே...ஸாரி· ....பொய்கையூர் மக்கள் தங்கள் பாட்டிலேயே தங்களுக் குரிய நடைபாதையை ஏற்படுத்திக் கொண்டு விடுவார் கள்...ஆகவே அரசாங்கத்தின் நெறிப்படுத்தலை நீங்கள் அப்படியே செயற்படுததுங்கள்...''

மேலதிக அரசாங்க அதிபரின் பேச்சு, தன்னை தெளி வானதொரு முடிவுக்கு வர உதவியதையிட்டு அவருக்கு அரசாங்க அதிபர் தனது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்து விட்டு, மேலும் இதுபற்றிப் பேசுவதற்காக அவரை அன்றைக்கு 'டின்னரு'க்கு தனது வீட்டிற்கு வரும்படி அழைத்திருந்தார்.

## ஒன்பது

எவ்வளவோ முறை கெஞ்சி மன்றாடியதன் பிறகுதான் முப்பத்தி ஏழு பேரை பொய்கையூரிலிருந்து நகரத்திற்கு கூட்டிச் செல்ல முடிந்தது செல்லத்துரை வைத்தியரால்.

வாமதேவன் இவர்களைக் கண்டதும் மிகுந்த சந்தோ ஷப்படுவாரென்றுதான் செல்லத்துரை நினைத்துக்கொண்டு அவரது வீட்டினுள்ளே காலடி எடுத்து வைத்தார்.

வாமதேவன் சோர்ந்த முகத்தோடு செல்லத்துரையை எதிர்கொண்டு அவரது கையிலே முன்னூறு ரூபாய் பணத் தினைக் கொடுத்தார்.

''வைத்தியர், உங்களோடை கதைச்சதுக்குப் பிறகு நான் நிதி சேகரிக்கிற விஷயத்திலே உடனேயே இறங்கி விட்டேன். மூன்று நாட்களிலை நிதிப்பட்டியலிலை எல்லாமாகத் தொழாயிரத்து எழுபத்து மூன்று ரூபா பணம் வசூலாகிவிட்டது. அதற்குள்ளே எனக்கு இங்கே நிற்க முடியாத கஷ்டமான நிலைமையொன்று வந்துவிட்டது. அதுதான் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறேன்...''

செல்லத்துரை திடுக்காட்டத்தோடு கேட்டார்:

''என்ன ஐயா, அப்பிடிக் கஷ்டம்? எங்களுக்குச் சொல்லுங்க. எங்களுக்காக இவ்வளவு பாடுபடுகிற உங்களுக்கு கஷ்டம் ஏற்பட்டால் நாங்கள் பார்த்துக்கொண்டிருப்போமா? சொல்லுங்க ஐயா....''

''இல்லை வைத்தியர், என்னுடைய அண்ணன் முறையானவருக்கு கடுமையான சுகவீனம். அவரை உடனேயே கொழும்புக்கு கொண்டுபோகச் சொல்லி டொக்டர்கள் வற்புறுத்துகிறார்கள். கொழும்புக்கு அவரோடை போக என்னைத் தவிர வேறை யாருமே இல்லை...நாளைக்குக் காலையிலை எப்படியும் நினைச்சபடி சத்தியாக்கிரகம் தொடங்கவேணும்.... அதுதான் யோசிக்கிறேன்....''

என்ன சொல்வதென்றே தெரியவில்லை செல்லத்துரைக்கு. வாமதேவனை நம்பித்தான் இந்த ஆட்களையெல்லாம் அவர் நகரத்துக்கு கூட்டிக் கொண்டு வந்தார்.

''நான் இனிமேல் என்ன ஐயா செய்ய வேணும்?''

செல்லத்துரை தயக்கத்தோடு கேட்டார்.

''வைத்தியர், நீர் நாலும் தெரிஞ்ச மனிதர். உமக்கு நான் அதிகமாக ஒன்றும் சொல்லத் தேவையில்லை. இப்ப நான் உம்மைக் கூட்டிக் கொண்டுபோய் அரசாங்க அதிபர் காரியாலயத்திலே எந்த இடத்திலேயிருந்து சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று காட்டுவேன். நீர் காலையிலே எட்டு மணிக்கு மற்ற எல்லாரையும் கூட்டிக்

கொண்டு அந்த இடத்துக்குப் போனால் சரி. நான் இந்த விஷயத்தைப் பற்றி எல்லாப் பத்திரிகையாளர்களுக்கும் சொல்லியிருக்கிறேன். அவர்களும் வருவார்கள். சுப்பிரமணியம் என்ற என்னுடைய நண்பர் ஒருவரும் அந்த இடத்துக்கு வருவார். அவர் உங்களெல்லாருக்கும் உதவுவார்—''

ஸ்தம்பித்துப்போய், தனது உடலே தளர்வுற்றவராய் எதுவுமே பேசாமல் வாமதேவனையே பார்த்துக் கொண்டிருந்தார் செல்லத்துரை. வாமதேவனின் நினைவிலே, ராசநாயகம் சொன்ன வார்த்தைகள் சம்பவக் கோர்வையாய் மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டிருந்தன...

திருவூரின் மத்தியிலே உள்ள அந்தப் பழைய கட்டிடம் எத்தனை வயதுள்ளதாயிருக்கும்? முன்புற வாசலிலே 1896ம் ஆண்டு என்று பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் உடைந்துபோய் மங்கலாகவேதெரிகின்றன. உற்றுப் பார்த்தால்தான் உருண்டை உருண்டையான அந்த எழுத்துக்களைக் கண்டு கொள்ள முடியும்.

அந்தப் பெரிய கட்டிடத்தின் தெற்குப் பக்கமுனையிலே தனித்தாற்போல நீளமான ஸ்டோர் றூம். அதிலேயே கடந்த இருபது வருஷங்களாக அந்த கூட்டுறவுப் பண்டகசாலை அமைந்திருக்கின்றது. நகரின் உணவுப் பண்டங்கள், துணிவகை, கனரகப் பொருட்கள் என்பனவற்றை விநியோகிக்கிற மிகப்பெரிய பண்டகசாலை அது.

பண்டகசாலையின் நிர்வாகியாக கடந்த ஐந்து வருஷங்களாகப் பணியாற்றி வருகிறான் சோமசுந்தரம். உற்சாகமான இளைஞன். எதையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்பதே அவனது கொள்கை.

இப்படியான பழைய கட்டிடத்திலே பண்டகசாலையை வைத்திருப்பது அவனுக்கு உள்ளூர வருத்தமாயிருந்தது. பண்டகசாலை ஒன்று எப்படி அமைந்திருக்க வேண்டுமென்

பது பற்றிய அழகான திட்டம் ஒன்று அவன் மனதிலே நீண்ட நாட்களின் முன்னரே வரையப்பட்டிருந்தது.

அதனாலே கூட்டுறவுத் திணைக்களத்துக்கு வாரம் ஒரு தடவை கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். உதவி ஆணையாளரை நேரிலே சந்திக்கின்றபோதெல்லாம் தனது சொந்தக் காரியம்போல இதனையே வற்புறுத்திக்கொண்டிருந்தான். இவனது உற்சாகம் அவருக்கு நன்றாகப் பிடித்துவிட்டது.

''உன்னுடைய உற்சாகம் என்னைக் கவர்கிறது. ஐந்தாயிரம் ரூபாவுக்குள் இப்போதைய கடையினை மீளவும் திருத்தி உன்னால் அமைக்க முடியுமா?''

சோமசுந்தரத்துக்கு மிகவும் சந்தோஷம். மகிழ்ச்சியோடு தலையை அசைத்தான். கண்களிலே உற்சாகம் மின்னித் துடித்தது.

கூட்டுறவுச் சங்கத்திற்கு உச்சி முதல் உள்ளங்கால் வரையிலும் திருத்தங்கள் தேவைப்பட்டன. காரை படிந்து மொற மொறக்கின்ற சுவர்கள். பெருச்சாளிகளுக்கு மிகவும் பாதுகாப்பான துளை விழுந்த வளைகள். சாந்துப் பூச்சு சிதிலமாகி மழைகாலத்திலே நீர் கசிகின்ற கூரை முகடு. சுருள் சுருளான ஒடுகளிலே அதிகமானவை வெடித்திருந்தன.

சிவபாலனிடம் அந்தக் கட்டிடத்தை எப்படியும் ஐந்தாயிரம் ரூபாவுக்குள் திருத்தித் தரும்படி அவன் சொல்லிக் கொண்டிருந்த போது கூரை முகட்டிலே உட்கார்ந்து, அதன் நிலைமைகளைப் பார்த்துக் கொண்டிருந்த கந்தையா உரத்த குரலிலே கத்தினான்:

''ஐயா...கூரை முகட்டிலை அரசமரக்கன்று ஒண்டு முளைச்சிருக்குது. பிடுங்கி எறியவோ?''

சோமசுந்தரத்துக்கு அதிசயமாயிருந்தது.

''எப்படியடாப்பா கூரையிலை அரமரம் வந்தது.... பெரிய அதிசயமாயிருக்கே....''

சிவபாலன் புன்னகை செய்தான்.

''கூரை முகட்டிலை மண் நல்லாகச் சேர்ந்திருக்கும். அதிலை ஏதாவதுகுருவி அரசம்பழ விதையைப்போட்டிருக்கும். அது இப்பிடியாக முளைச்சிருக்கும். இன்னும் இரண்டு மூன்று வருஷம் போனால் இந்த அரசங்கன்றே கூரை முகட்டை விரிசலடையச் செய்து உடையச் செய்திருக்கும்... நல்லகாலம்தான் இப்பவே இந்த விஷயம் தெரிஞ்சது....சரி, நீ அதைப் பிடுங்கியே எறிஞ்சுவிடு கந்தையா...''

இரண்டு நிமிஷங்களின் பின்னர் கந்தையாவிடமிருந்து பதில் வந்தது:

''ஐயா....அரசமரவேர் நல்லாக இறுகிப் போயிருக்கு... அந்தச் சீமெந்துச் சாந்தை நாங்கள் உடைச்சு எடுக்கிற போதே இதையும் பிடுங்கி விடலாம்.... நான் அப்ப இறங்கவோ?''

''இறங்கு'' என்றான் சிவபாலன் மேலே பார்த்த படியே.

கந்தையன் கூரை முகட்டிலிருந்து இறங்கி ஒரு மணி நேரம் கூட ஆகியிருக்க முடியாது. இன்ஸ்பெக்டர் சூர்யா ஜெயவர்த்தனாவும், ஆறு பொலிஸ்காரர்களும் சோமசுந்தரத்தின் கடை அருகே வந்து ஜீப்பை நிறுத்தினர்.

பேச்சு மூச்சு ஒன்றுமில்லை. ஜெயவர்த்தனா கடைக்குள் போனவன், சோமசுந்தரத்தின் தலை முடியைப் பிடித்து உலுப்பி விட்டு கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான். வெளியே நடு வீதியில் அலக்க மலக்க விழுந்த சோமசுந்தரத்தை பூட்ஸ் காலினுள் போட்டு உதைத்து மிதித்தான்.

கடைத்தெரு அச்சத்தில், மௌனத்தில், பயங்கரத்தில் உறைந்து போய் ஸ்தம்பித்திருந்தது. வார்த்தைகளற்று சனங்கள் ஒடுங்கிப் போய் நின்றனர்.

சோமசுந்தரம், முகத்திலும் வாயிலும் இரத்தம் வழிய தீனமாக அலறினான் :

''ஏன் ஐயா என்னை அடிக்கிறீங்க...? ...ஏன் ஐயா?....''

ஜெயவர்த்தனா கொச்சைத்தமிழில் கத்தினான் :

"டே... பண்டி, இந்த 'கவண்மென்டு'க்கும் பயப்பிடுகிறது இல்லை... பொலிசுக்கும் பயப்பிடறதில்லை என்டு சொல்லித்தானே நீ.... நீதானே அந்த மரத்தை, அந்த அரச மரத்தை வெட்ட ஆளை மேலை விட்டது... நீ தாங்டா...."

சோமசுந்தரம் கைகளை ஊன்றிக் கொண்டு எழ முயன்றான். முடியவில்லை. முள்ளந்தண்டு, துண்டு துண்டாக உடைந்தாற் போல வலித்தது. வாயிலிருந்து இரத்தம் குபு குபு வென்று வழிந்து வாயெல்லாம் கசகசத்தது.

''இல்லை ஐயா, ஒரு நாளுமே நான் அப்படி நினைத்ததுமில்லை. சொன்னதுமில்லை. சுத்தப் பொய் ஐயா....யார் ஐயா உங்களுக்கு இதைச் சொன்னது?''

ஜெயவர்த்தனாவுக்கு கண்கள் சிவந்தன.

''நீ சுத்த பொய்காரனடா....நீ அரசம் மரத்தை வெட்ட ஆளை மேலை விட்டதாடா இல்லையடா...அது தாங் சொல்லு. சொன்னதா?''

கொச்சைப் பாஷையிலே சத்தமிட்டான் ஜெயவர்த்தனா.

சோமசுந்தரம் தலையை அசைத்த மறுகணமே அவன் நெற்றிப் பொட்டிலே, ஜெயவர்த்தனா பூட்ஸ் காலினால் மூர்க்கமாக எட்டி உதைத்தான். 'கடவுளே' என்ற குரல் தான் சோமசுந்தரத்தின் கடைசிக்குலரலாய் ஓய, அவனை அப்படியே ஜீப்பினுள் தூக்கிப் போட்டனர் பொலிஸ்காரர்கள். சோமசுந்தரத்தின் உடலெங்கும் ரத்தம் பீறிட்டது.

அன்று மாலைக்குள் கந்தையாவும், சிலபாலனும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். வழமையான உபசரிப்புகள் அவர்களுக்கும் கொடுக்கப்பட்டன. பொலிசார் இவர்களுக் கெதிராக வழக்குத் தொடர்வதற்கு நீதிபதியிடம் ஒரு வார அவகாசம் கேட்டார்கள்.

''இவர்களை விசாரணை முடியாமல் வெளியே விட்டால் அமைதிக்குப் பங்கமும், பொதுச் சொத்து களுக்கு சேதமும் விளைவிக்கப்படலாம் என நாங்கள் அஞ்சுகிறோம். எனவே சமாதானமான சூழ்நிலையின் பொருட்டு இவர்களை ஒரு வார காலம் 'றிமாண்டில்' வைக்க வேண்டும்'' என்று ஜெயவர்த்தனா மிகவும் பணிவோடு, தாழ்மையான குரலிலே நீதிபதியிடம் விண்ணப்பம் செய்து கொண்டான்.

நீதிபதி அதனை ஏற்றுக் கொண்டார்.

பிணையில் வெளியே வந்த கந்தையா மூன்றாம் நாளே இரத்தமாய் கக்கிச் செத்துப் போய்விட்டான். மரண விசாரணை அதிகாரி, அரசாங்கத்தினால் கௌரவப்பதவியாக 'சமாதான நீதவான்' பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர். இன்னும் சில கௌரவங்கள் அரசாங்கத்திடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பவர்.

நாற்பத்தி மூன்று வயதானாலும் மிகவும் திடசாலியாயிருந்த கந்தையாவுக்கு பக்கத்து வீட்டுக்காரனோடு தகராறு இருந்ததாகவும், முதல் நாளிரவு நல்ல கள்வெறியுடன் அவனது வீட்டுக்குள் உள் நுழைய முயற்சித்த அவன், தடுமாறி வீட்டுக் 'கேட்'டுடன் மோதியதால் நெஞ்சில் காயம் ஏற்பட்டு அதனாலேயே இத்திடீர் மரணத்துக்கு ஆளானான் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் கூறின. அவன் இரத்தம் கக்கிச் செத்தற்கு பலமான ஆயுதம் அவனது நெஞ்சைத் தாக்கியமையே காரணம் என்று டாக்டரின் அறிக்கை தெரிவித்தது. அந்த ஆயுதம் மிக வன்மையும், திண்மையுமானது என அறிக்கை கூறியது. பக்கத்து வீட்டுக்காரனின் வெளிக்'கேட்டு'

இரும்புக் கம்பிகளால் ஆனதென்பதை மரணவிசாரணை அதிகாரி அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்திருந்தார்.

வலி தாளாமல் படுத்திருந்த சோமசுந்தரம், தன்னைப் பார்க்க வந்திருந்த சண்முகத்தைக் கண்டதும் பதை பதைப்போடு எழுந்து உட்கார முயன்றான். மெலிந்த தோற்றமுடைய உதவி ஆணையாளரின் முகத்திலே சோகமே தேங்கி இருந்ததை அவதானித்த சோமசுந்தரம் விசனத்துக்குள்ளானான்.

''ஐயா....என்ன ஐயா இது, இவ்வளவு அலுவலு களுக்கையும் என்னைப் பார்க்கவெண்டே வந்தனீங்கள்... உடம்பு கொஞ்சம் சுகமான உடனை நானே உங்களை நேரிலே வந்து பார்க்க வேணுமென்று இருந்தன்... பாருங்க ஐயா, ஒன்றைப் பற்றியுமே தெரியாத எங்களை என்ன மாதிரிச் சிதைச்சுப் போட்டாங்கள்.... கந்தையாவை அடிச்சே சாகக் கொண்டு விட்டாங்கள்...ஐயா, நீங்கள் சொன்ன பிறகுதானே ஐயா நான் இந்த வேலையைத் தொடங்கினனான்....''

சண்முகம் தன்னோடு கொண்டு வந்த பெரிய கூடையை அவனது தலைமாட்டுப் பக்கமாக வைத்தார்— பெரிய 'ஹார்லிக்ஸ்' போத்தல். 'சனடஜன்'. தோடம் பழங்கள்.

''இதென்ன ஐயா, இதெல்லாம் என்னத்துக்கு? இவ் வளவுக்கு என்னை நேசிக்கிற அளவுக்கு நான் என்னத்தை உங்களுக்குச் செய்திருக்கிறேன்?''

கண்ணீர் மல்க அவன் சண்முகத்தைப் பார்த்து கை கூப்பினான்:

''சோமு, உமக்கு உடல் நல்லாக நொந்துபோயிருக் கும். உட்காயமிருக்கும். அதுக்காகத்தான் இதெல்லாம் கொண்டு வந்தனான்...உம்மைப்போலை ஒரு நல்ல ஆளுக்கு இப்பிடிச் செய்யவேண்டியது என்னுடைய கடமை....அதோடு உம்முடைய கடையிலை நான் வாங்கு

கிற எந்தப் பொருளுக்குமே நீர் காசு வாங்கிறதில்லை.... அதை நீர் மறந்தாலும் நான் மறப்பனோ?"

சோமசுந்தரத்தின் கன்னங்களிலே கண்ணீர் வழிந்து மார்பில் பொட் பொட்டென உதிர்ந்தது.

"இப்பிடி உமக்கு நடந்ததற்கு யார் காரணமென்று உமக்குத் தெரியுமா சோமு?"

சோமசுந்தரத்தின் முகத்திலே அதிசயம் படர்ந்தது. கண்களிலே கேள்வி கிளர்ந்தது.

"இல்லையே ஐயா....எனக்கு யாருமே எதிரி இல்லை ஐயா...யாராலை இப்படி வந்தது ஐயா?..."

சுற்றுமுற்றும் பார்த்தார் சண்முகம். பின்னர் மெது வான குரலிலே சொன்னார்:

"உம்முடைய கடைக்கு முன்னாலை கடை வைத்திருக் கிற அல்விசைத் தெரியுமா?....கடையிலை பொருளையெல் லாம் பதுக்கி வைத்திருக்கிறதுக்காக அவனை நான் ஒரு முறை எச்சரிக்கை செய்திருக்கிறன். தான் ஒரு சிங்களவன் என்று துவேஷங் காட்டித்தான் நான் அப்படிச் செய்ததாக அவன் எனக்கு எதிராக ஏற்கனவே 'பெட்டிசம்' போட்டிருக்கிறான்...அவன்தான் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறான்...இப்ப இன்னுமொரு வேலை செய்திருக் கிறான். நான் உம்மைத் தூண்டிவிட்டுத்தான் இதைச் செய்ததாக 'பெட்டிசன்' அனுப்பியிருக்கிறான்..."

சண்முகம் மௌனமாயிருந்தவாறே அவனையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்.

"இதென்ன ஐயா நியாயம்? யார் என்ன சொன்னா லும் அதை அப்படியே நம்பிவிடுகிறதோ? நீதி, விசாரணை ஒன்றுமே இல்லையோ? 'பெட்டிசன்' எல்லாம் உண்மை யென்றுதான் அரசாங்கம் முடிவு எடுத்திடுதோ?"

கவலையோடு சிரித்தார் சண்முகம்.

"யார் யாரைப்பற்றி 'பெட்டிசன்' அனுப்புகிறார்கள் என்றதை வைத்துத்தான் உண்மை பொய்யை அரசாங்கம்

இப்போ தீர்மானிக்கிறது. அதோடு அல்விஸ் இப்போதைய பிரதி பாதுகாப்பு மந்திரியினுடைய ஊரைச் சேர்ந்தவன். அவருடைய கையாள்....இது நேற்றுத்தான் எனக்குத் தெரியும்...''

சொல்லி முடித்துவிட்டு சண்முகம் திடீரென்று சோமசுந்தரத்தைப் பார்த்து, ''சோமு, நீர் எனக்கு இப்ப ஒரு சத்தியம் செய்து தரவேண்டும்'' என்று அவனை நோக்கி உள்ளங்கையை விரித்து நீட்டினார்.

சோமசுந்தரம் பதறிப்போய் விட்டான். ''ஐயா இதென்ன சொல்லெல்லாம் சொல்லுறியள்....உங்களுக்காக நான் எதை வேணுமென்றாலும் செய்வன்....சொல்லுங்க...''

சண்முகம் குனிந்திருந்தார் :

''சோமு, இந்தக் கட்டிடத்தை நான்தான் இடித்துத் திருத்தச் சொன்னேன் என்றதை இப்ப 'டிப்பார்ட்மென்ட்' அறிந்தால் என்னை நிச்சயம் அவர்கள் வேலையிலிருந்து 'டிஸ்மிஸ்' கூட செய்யக்கூடும். எனக்கு மூன்று பிள்ளைகள். எந்த வருமானமோ, சேமிப்போ இல்லாத மனுஷன் நான்....கட்டிடத்தை திருத்துவது சம்பந்தமாக நீர் எழுதின எல்லாக் கடிதத்தையும் நான் 'பைலிலை' இருந்து எடுத்து எரித்துவிட்டேன். அல்விசினுடைய 'பெட்டிசன்' சம்பந்தமாக அரசாங்கம் நிச்சயம் விசாரணை வைக்கும்....''

திடீரென்று சண்முகம் அவனது கைகளைப் பற்றிக் கொண்டார் :

''சோமு, இந்தக் கைகளையே உன்னுடைய கால்களாக நினைத்துக்கொண்டு சத்தியம் கேட்கிறன். இது சம்பந்தமாக நான் எழுதிய எல்லாக் கடிதங்கள், உமது கடிதப் பிரதிகளை எனக்குத் திருப்பித் தந்திடவேணும். அதோடு நீராகவே இதைச் செய்யத் தொடங்கினதாக யார் கேட்டாலும் சொல்ல வேண்டும்.... சத்தியம் செய்யும்....''

கொஞ்சநேரத்திற்கு சோமசுந்தரத்தால் எதையுமே பேசமுடியவில்லை. அந்த அரசாங்க அதிகாரியின் கலக்கமும் அச்சமும் அவனுக்கு அவர்மேல் பரிவையும் இரக்கத்தையும் உண்டாக்கிற்று. அதிகாரத்திலிருக்கிறபோது சிலிர்த்துக்கொள்கிற இவர்களின் உண்மை முகம் இதுதானா என்று அந்த வேளையிலும் அவன் நினைத்துக் கொண்டான். மனம் முழுவதுமே, வெறுமையாய், பெருமூச்சாய் நிறைந்து கனத்தது. தளர்ந்த குரலிலே சொன்னான்:

''நான் சத்தியம் செய்தால் அதைச் சாகும் வரைக்கும் காப்பாற்றுவன் ஐயா...''

அவர் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்,

மூன்று மாதங்களின் பின் சோமசுந்தரத்திற்கு எதிரான வழக்கிலே தீர்ப்பளிக்கப்பட்டது. 'அரசாங்கக் கட்டிடத்தின் கூரையிலே இருந்த அரசமரத்தை சேதப்படுத்த முயன்றமைக்கும், அரச உத்தரவில்லாமல் அரசாங்கக் கட்டிடத்தை சேதப்படுத்தியதற்காகவும் முதலாம் எதிரியான சோமசுந்தரத்துக்கு ஒன்பது மாதச் சிறை தண்டனையும், ஐந்நூறு ரூபா அபராதமும் முதலாம் எதிரிக்கு உடந்தையாயிருந்த இரண்டாம் எதிரி கந்தையாவுக்கு ஆறுமாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படுகிறது'.

**வா**மதேவனுக்கு ராசநாயகம் இந்தச் சம்பவத்தை நேற்றுச்சொன்னபோது, அவனுக்குசப்தநாடிகளும் நடுங்கி அதிர்ந்தன. ஒரு சின்ன அரசமரமே மனித உயிரொன்றைப் பறித்து, இன்னொருவனை சிறைக்கும் அனுப்பியதென்றால் இந்தப் பெரிய அரசரமரம், அதுவும் தேசிய அளவில் பிரச்சினையை விசுவரூபமெடுக்க வைத்த அரசமரம் எவ்வளவு விளைவை உருவாக்குமென நினைத்தபோது வாமதேவனுக்கு தலை விறைத்து, அணு அணுவாக வெடிக்கத் தொடங்கிற்று...

எப்படியும் எதையாவது சொல்லி இந்தப் பிரச்சினையிலிருந்து தான் கழன்று கொள்ள முடிவு செய்து கொண்டார் வாமதேவன். அது அவ்வளவு கஷ்டமாயிருக்கவில்லை. கவலையோடு நின்ற அந்த கிராம ஜனங்களைப் பார்க்காமலே அங்கிருந்து விரைந்தார் வாமதேவன்.

## பத்து

பெரியபிள்ளை பிரசவ வலியால் துடித்துக் கொண்டிருந்தாள். இது அவளின் தலைப்பிரசவம். அவளுடைய கணவன் நகரத்துக்கு செல்லத்துரையரோடு சத்தியாக்கிரகம் செய்வதற்காகச் சென்று விட்டான்.

பெரியபிள்ளையின் தம்பியான கனகலிங்கத்திற்கு அக்காவின் வேதனையைக் கொஞ்சமும் தாங்கமுடியவில்லை. கண்ணீர் மல்கிட அங்குமிங்குமாய் நடந்து கொண்டிருந்தான்.

மருத்துவச்சி அழுகிற குரலிலே சொன்னாள்:

"தம்பிமாரே நேரத்தை வீணாகப் போக்காமல் வண்டில் மாட்டைக் கட்டுங்கோ. மெதுவாகப் பெரிய பிள்ளையை வண்டியிலை ஏற்றி பட்டணம் போய் அங்கையுள்ள டாக்குத்தரிட்டை காட்டினால்தான் நன்மை. வயுத்துப் பிள்ளைத்தாச்சி இங்கை கிடந்து துடிக்க நீங்கள் ஆளுக்கொரு பக்கமா முழிசிக்கொண்டு நின்று என்ன பிரயோசனம் வரப்போகுது...? இப்பிடித்தான் கண்ணகையையும் மாட்டுவண்டியிலை போன சித்ரா பௌர்ணமி அன்று பட்டணத்துக்கு கொண்டு போய் அவள் சுகமாகப் பிள்ளைப் பெற்றாள். அதையெல்லாம் மறந்து போய் ஏண்டா எல்லாரும் பதகளித்துப் போய் நிற்கிறீங்கள்?"

தில்லையம்பலத்தைப் பார்த்து, கனகலிங்கம் திடமான குரலிலே சொன்னான்:

''தில்லையம்பலம் அண்ணை....போய் நீங்கள் வண்டியிலை மாட்டைக் கட்டுங்கோ...பொன்னி ஆச்சி, நீங்களும் கூட வாருங்க....தலைகணி சீலையை எடுத்து ஆயுத்தம் செய்யுங்க...''

கனகலிங்கம் தன் வயதொத்த இளைஞர்கள் ஆறு பேராடு வந்து நின்றதும் பொன்னிக் கிழவிக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது. வியப்போடு கண்கள் பளபளக்க அவர்களைப் பார்த்தாள். சத்தமாகக் கேட்டாள்:

"என்னடாப்பா பொடியங்களே, அவள் பிள்ளைப் பெறுவுக்கெண்டு போறாள்.... நீங்கள் மண்வெட்டி, அலவாங்கு. தடியளோடை எங்கை வெளிக்கிட்டிருக்கிறியள்...? இதென்ன கலிகாலமடா...''

கனகலிங்கம் யோசனையோடு சொன்னான்:

"அரசடி வேலியைப் பிய்க்காமல் எப்பிடியணை பொன்னியாச்சி பெரிய ரோட்டுக்குப் போறது?''

பொன்னிக் கிழவியின் கண்கள் சுருங்கின. அவள் ஒன்றும் பேசாமல் ஒற்றைத் திருக்கல் வண்டியில் பெரிய பிள்ளைக்குப் பக்கத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டாள்.

வலி தாங்காமல் புலம்பிக்கொண்டிருந்த பெரிய பிள்ளையின் நெற்றியைப் பரிவோடு தொட்டு ஆறுதல் படுத்தி வருடியவாறு, ''அம்மாளாச்சி உதவி செய்வாள். அழாதை மோனை....பிள்ளைப் பெத்து வந்து முப்பத்தொண்டு முடிஞ்சாப்பிறகு அம்மாளாச்சிக்கு மடை வைப்பன் என்று நேர்ததி வை....ஒரு கஷ்டமும் வராது....'' என்று சொல்லிக்கொண்டிருந்தாள் பொன்னிக் கிழவி.

வண்டி மணல் நிலத்தில் ஊர்ந்து போய்க்கொண்டிருந்தது. வழியில் நின்ற நாய்கள் வண்டியைப் பார்த்து, நின்ற இடத்திலேயே சோம்பலோடு ஊளையிட்டன.

அரசடி வந்தது. திருகைகை வண்டில், மாட்டின் கிணு கிணுவென்ற சத்தத்தை ஒலிப்பதைக் குறைத்துக்கொண்டு மெதுவாக நின்றது.

கனகலிங்கமும் மற்ற இளைஞர்களும் அந்த மெல்லிய இருளினுள் பதுங்கிப் பதுங்கி முன்னேறினர். பிரதான வீதிக்குப் போகும் பாதையிலே யாருமே காணப்படவில்லை. விறுவிறுவென்று கம்பிகளை இழுத்து அவை பொருத்தப் பட்டு நின்ற கட்டைகளை அசைத்துக்கொண்டிருந்தனர்.

நிலவு பூரண வடிவம் பெறுவதற்குத் தன்னைப் பெருப் பித்துக்கொண்டு—வானிலே, வெற்றுநீலப் பரப்பிலே தலையை உயர்த்தியவாறிருந்தது.

அந்தப் பாதையின் அடைபட்ட பகுதியைத் திறப் பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. இளமையின் மூர்க்கமான வேகம், அந்த நீண்ட வழி அடைப்பினை விலக்கிக்கொண்டிருக்கிற பிரயத்தனம் இரண்டு மணித் தியாலங்களுக்கு மேலாக நீண்டுகொண்டே போனது...

பலம் வாய்ந்த வேலி மெல்ல மெல்ல விழுந்துபோய்க் கொண்டிருந்தது. நிலவு வெளிச்சத்தில் இளைஞர்கள் ஒருவரையொருவர் சந்தோஷமாகப் பார்த்துக்கொண்ட னர்.

திடீரென அந்த வீரிடல்.

பொன்னிக் கிழவியின் அலறல் அந்தப் பொட்டல்க் காட்டையே அதிரவைத்து ஒலித்தது:

"என்ரை ராசாத்தீ....போயிட்டியோடீ...."

அவளின் சத்தத்தில் அரச மரத்திலிருந்த பறவைகள் சடசடவென்று அங்குமிங்குமாய் சிறகடித்துப் பறந்தன.

## பதினொன்று

சுதாகர் நிம்மதியற்றவனாய் உட்கார்ந்திருந்தான். அலுவலகத்திலிருந்த எல்லாரும் அவனைப்பார்த்த பார்வையில் வெறுப்பும் குரோதமும் நிறைந்திருப்பதை உணர்ந்து கொண்டான். நேற்று அவன் லீவில் இருந்தான்.

கடந்த பத்து நாட்களாய் ஒரே அலைச்சல். கொழும்பில் இருந்து ஆசிரியரின் கட்டாயத்தின் பேரில் யாழ்ப்பாணம் சென்றிருந்தான். பொய்கையூர்க் கிராமத்தின் அரசமர விவகாரம் பற்றி நேரே கண்டறிந்து புகைப்படங்களுடன் ஒரு கட்டுரையை உடனே பத்திரிகையில் வெளியிட வேண்டுமென்று சொல்லியிருந்தார் ஆசிரியர். அன்று மாலையே புறப்பட்டுவிட்டான் சுதாகர். சுதாகரின் அணுகுமுறையில் ஆசிரியருக்கு மிகவும் நம்பிக்கையும் விருப்பமும் இருந்தது. ஒவ்வொரு எழுத்திலும் உண்மையும் கடும் உழைப்பும் அர்ப்பணிப்பும் இருந்தன. இதனால்தான் சென்ற ஆண்டின் சிறந்த நிருபருக்கான விருது சுதாகருக்கு கிடைத்தபோது, ''சுதா, உன்னால் இந்த விருதுதான் பெருமை பெறுகிறது'' என்று பலரின் முன்னாலும் அவனைப் பாராட்டினார் பத்திரிகை ஆசிரியர்.

பொய்கையூரின் நிலைமை, சுதாகரை மிகவும் சங்கடப்படுத்திற்று. சின்னஞ்சிறிய அந்தக் கிராமத்தின் வாசலில் தேவையற்ற குறுக்கீடாக அந்த முள் வேலியும், அதனுள் நின்ற அரசமரமும் அவனுக்கு முதற்பார்வையிலேயே தெரிந்தது. மிகுந்த சிரமத்துடன் அந்தக் கிராமத்திற்குள் சென்ற அவன், அச்சத்திலும் தடுமாற்றிலும் சிதைந்து போயிருந்த அந்த மக்களின் நிலைமையை உணர்ந்து கவலையும் பரிதாபமும் கொண்டான். மனதிலுள் சஞ்சலம் முள்ளாய் நெருடிற்று. மனக்குமுறல், வார்த்தைகளில் நெருப்புத்துளியாய் கொட்ட, அந்தக் கிராம மக்கள் படுகிற அவஸ்தை, அரசமரத்தினால் அவர்களின் நாளாந்தவாழ்வு

எவ்விதம் குலைந்து போயிருக்கிறது, அந்த அரசமரம் அவர்களது வாழ்வின் பன்முகங்களையும் எப்படித் தடுத்து நெருடிக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும் மனதைத் தொடும் விதத்தில் கட்டுரையாய் எழுதியிருந்தான் சுதாகர். அவனது கட்டுரையின் முதல் வரியை மட்டுந்தான் ஆசிரியர் மேலோட்டமாகப் பார்த்தார். பின்னர் அச்சுக்குகொடுத்து விட்டு சுதாகரோடு வேறு விஷயங்களைப்பற்றிப் பேசினார். கட்டுரை நேற்று முன் தினம்தான் வெளியாகிற்று. நேற்று சுதாகர் லீவில் வீட்டில் நின்றபோது பக்கத்துவீட்டு சுகுமாரன் வீடு தேடி வந்தார். நெகிழ்வான குரலில், ''சுதா, உங்க கட்டுரை மனசைப் பிழியப் பண்ணிப் போட்டுது. இன்னும் மனசு கனமாகவே இருக்குது'' என்று கூறினார்.

''உங்க கட்டுரைக்குப் பிறகாவது அந்தச் சனங்களுக்கு ஏதாவது வழி பிறக்கவேணும்... பேனா முனையாவது அவர்களின்ரை கஷ்டத்தை தீர்த்து வைக்குமென்று நான் நம்புகிறேன்'' என்று உறுதியான குரலில் கூறினார் அவர். சுதாகர் மௌனமாக அவரைப் பார்த்து தலையை அசைத்தான். இந்தக் கட்டுரையின் மூலம் பொது சன அபிப்பிராயத்தை உருவாக்கி அந்த மக்களுக்கு விடிவினை உண்டாக்க வேண்டுமென்ற அவனது தீர்மானம் இப்போது மனதினுள் மேலும் உறுதி பெற்றது. முடிந்தால் இன்னொரு முறை பொய்கையூருக்குச் சென்று சில நாட்களுக்கு அங்கே நின்று மேலும் விபரங்களைச் சேகரித்துக் கொண்டு வரவேண்டுமென்று நினைத்தான். அந்த நினைவோடு பத்திரிகை அலுவலகத்திற்குள் நுழைந்தவனை அங்கு நிலவிய இறுக்கம் ஆச்சரியம் கொள்ள வைத்தது. பரபரப்போடு உட்கார்ந்திருந்தான்.

பியூன் செருமினான்: ''ஆசிரியர் வரச் சொன்னார்...''

சுதாகர் எழுந்து உள்ளே சென்றான்.

வழமையான புன்னகையின்றி ஆசிரியரின் முகம் கடுகடுத்துப் போயிருந்தது.

சட்டென்று பேச்சைத் தொடங்கினார் ஆசிரியர்:

"ஒரு மனிஷன் மேல் அளவுமீறின நம்பிக்கை வைத்து செயல்படுகிறது எவ்வளவு தவறான விஷயம் என்பதை நான் இப்போதுதான் அறிந்து கொண்டேன்..."

சுதாகருக்கு எதுவும் விளங்கவில்லை. ஆச்சரியத்தோடு ஆசிரியரைப் பார்த்தான்.

"சேர், என்ன சொல்றீங்கள்?"

"நீ பொறுப்பில்லாமல் ஒரு கட்டுரையை எழுதிக் கொடுக்க, நான் உன்னை நம்பி அதைப் படித்துப் பார்க்காமல் அச்சுக்கு கொடுக்க.... அது வெளியாகி..."

குறுக்கிட்டான் சுதாகர்:

"அதில் ஒரு வரிகூட பொய் இல்லையே...."

கடுகடுப்பாக அவனைப் பார்த்தார் ஆசிரியர்.

"நீ அப்படிச் சொல்கிறாய். ஆனால் பிரதமரின் பத்திரிகைத் துறைச் செயலாளர், உனது கட்டுரையில் உள்ள அவ்வளவு விஷயங்களும் பொய்யானது. விஷமத்தனமானது. வகுப்புவாத உள் நோக்கங் கொண்டது என்று குறிப்பிட்டு எச்சரித்திருக்கிறார். 'பப்ளிஷர்' கடுங் கோபத்தில் இருக்கிறார். பாராளுமன்ற ஒழுங்குக் கமிட்டி இதை இன்று பரிசீலனை செய்கிறது. எனக்கு அவிழ்க்க முடியாத சிக்கல்...."

சுதாகருக்கு மனம் குறுகுறுத்தது.

"இந்தக் கட்டுரைக்காக அரசு இனிமேல் எங்களுக்கு எந்த விளம்பரமும் தரப்போவதில்லை என்று 'பப்ளிஷர்' மிரட்டப்பட்டுள்ளார். இன்னும் அச்சுறுத்தல்கள் வரலாம். 'பப்ளிஷர்' சட்ட ஆலோசனை கேட்டிருக்கிறார். இந்தப் பிரச்சினை தீர்வதற்கு அவர்கள் ஒரே ஒரு வழிதான் கூறுகிறார்கள்...."

''அது என்ன வழி?''

ஆசிரியர் அவனை இரக்கமாகப் பார்த்தார்

''அதைக் கேட்டால் நீ வருத்தப்படுவாய்....''

''சொல்லுங்க?''

''தவறான கட்டுரையை வெளியிட்டமைக்காக 'பப்ளீஷ'ரும் நானும் பத்திரிகையின் முன் பக்கத்தில் பகிரங்க மன்னிப்புக் கேட்கப் போகிறோம்....''

''ஐயையோ'' என்றான் சுதாகர்.

ஆசிரியர் தொடர்ந்தார்: ''தவறான தகவல்களை வைத்து கட்டுரை எழுதியமைக்காக நிர்வாகம் இன்றைக்கே உன்னை 'டிஸ் மிஸ்' செய்கிறது. இதைத் தவிர எங்களுக்கு வேறுவழியில்லை சுதாகர்... எனக்கும் கஷ்டமாகத்தான் உள்ளது....''

சுதாகர் பேச்சற்று திகைத்துப் போயிருந்தான்.

## பன்னிரெண்டு

மாட்டுக் கன்று சம்பந்தமான வழக்கிற்காக நீதிபதி, மயிலரை றிமாண்டிலிருந்து நீதிமன்றத்திற்குக் கொண்டு வரும்படி கட்டளையிட்டிருந்தார்.

கூட்டில் நின்ற மயிலரைப் பார்த்து எதிர்த் தரப்பு அட்வக்கேட் கர்ஜித்தார்:

''...எனது கட்சிக்காரரர் கௌரவமான மனிதர். அரசாங்கத்தின் முக்கிய உத்தியோகத்தர். அரசின் பாதுகாப்பையும், சட்டத்தையும் காத்து நிற்கிறவர். அத்தகையவர் இந்தக் குற்றத்தை செய்யக்கூடியவரா என்பதை யோசித்துப் பாருங்கள்?....மாறாகக் குற்றம் சாட்டியுள்ள மயிலர்

அரசாங்கத்திற்கு விரோதமான செயல்களையே புரிந்து வருபவர்....அதை நீதிபதி அவர்களும் அறிவீர்கள். முந்தா நாள் இரவு அரசாங்கச் சொத்தை சேதப்படுத்தி கலகம் உண்டாக்க கிராமவாசிகளைத் தூண்டிவிட்டது இவர் தான்...அதனால் இன்று காலை அங்கே பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது. அதுமட்டு மில்லை, இந்த நகரத்திலே அரசாங்க அதிபர் காரியாலயத் தின் முன்னே நிகழ்ந்த தடியடியின் பின்னணி என்ன...? ஐயா, இவைகளையெல்லாம் நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் சமுதாய வாழ்வில் குழப்பங்களையே தூண்டிக் கொண்டிருக்கிற சிலர் கௌரவமான மனிதரை எவ்வித மெல்லாம் அவமானப்படுத்த முனைகின்றனர் என்பதை...''

நீதிபதி தனக்கு முன்னாலிருந்த சூழலிலிருந்து விடு பட்டு, தனது நினைவுகளினுள் ஆழ்ந்து போயிருந்தார்....

'இந்தப் பொலிஸ்காரர் சுப்பையா எனது பாதுகாவல ராக வந்ததிலிருந்து நான் அவதானித்துக் கொண்டுதான் வருகிறேன். எவ்வளவு வேலைப்பளுக்கள் எனக்கு குறைந்து போய்விட்டன. 'சின்சியரா'ன இவன் ஒருமாட்டுக்கன்றுக்கு ஆசைப்பட்டிருப்பானா? எள்ளென்றால் எண்ணையாக நிற்கிற இவன், எந்த நேரமும் ஒரு நாய்க்குட்டி போல என்னையும் என் குடும்பத்தையும் காத்து நிற்கிற இவன்... சீ, ஒருபோதும் இவன் தவறாக நடக்கக் கூடியவனாய்த் தெரியவில்லையே....'

''வாதங்களையும் சாட்சிகளையும் ஆராய்ந்து பார்த்த தில் மாட்டுக்கன்று சுப்பையாவினுடையது என்றே தெரி கிறது. சுப்பையா இக்கன்றை வளர்த்துவந்ததற்கான ஆதாரங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.... அவருடைய உத்தியோக நடவடிக்கையும் நன்றாகவே குறிப்பிடப் பட்டுள்ளது. மயிலருடைய வழக்கு பொய்யென்றே நிரூபணமாகிறது. எனவே எதிரிக்குரிய வழக்குச் செலவை மயிலர் கட்டவேண்டுமென்றும், மாட்டுக்கன்று சுப்பையா வுக்கே சொந்தமானதெனவும் தீர்ப்பளிக்கிறேன்.''

## பதின்மூன்று

பிரதமர் கூட்டிய அவசர மகாநாட்டில் இராணுவ தளபதி, ஐ. ஜி. பி, பொய்கையூர்ப்பகுதி எஸ். பி. ஆகியோர் பங்குபற்றினர்.

பொய்கையூர்ப்பகுதியின் அரசாங்க அதிபர் தமது கடமையைச் சரிவரச்செய்யவில்லை என்று பிரதமரால் எச்சரிக்கப்பட்டு, 'கட்டாய லீவில்' அனுப்பப்பட்டதால் நிர்வாக மட்டத்திலிருந்து எந்த அதிகாரியும் மகாநாட்டிலே கலந்து கொள்ளவில்லை.

பிரதமர் மிகவும் ஆத்திர வசப்பட்டிருந்தார். உடம்பு தடதடவென்று ஆட, வார்த்தைகள் கட்டுப்பாட்டினை மீறிக் கொதித்துப் பொரிந்தன....

''ஒரு கிராமமக்கள் முற்றாகத் திரண்டு புனிதமான அரசமரத்தைச் சுற்றியுள்ள வேலியை அழித்ததுவும், மரத்தைச் சேதப்படுத்தியதும் சாதாரண விஷயமல்ல, இது ஒரு அராஜகச் செயல். ஜனநாயக முறையிலே தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்திற்கு எதிராக விடுக்கப் பட்ட மிரட்டல். அதை உரியமுறையில் நாங்கள் எதிர் கொள்ளுவோம்.... நீங்கள் எப்போது அந்த இடத்திற்குப் போய் 'ஒப்பிரேஷ'னை ஆரம்பிக்கப் போகிறீர்கள்?''

இராணுவதளபதி பிரதமரைப் பணிவோடு பார்த்து விட்டு தலையைச் சொறிந்தார்.

பிரதமர் தணிவாக, ''ஏன் ஏதாவது ஆலோசனை இருக்கிறதா.... சீஃப்'' என்றார்.

இராணுவ தளபதி நன்றி தெரிவிப்பவரே போல சொன்னார்:

''கௌரவமான ஐயா, நாளைக்கு விசாகதினம். புத்தபெருமான் ஞானம் பெற்ற புனிதமான பௌர்ணமி தினம். நாளைக்கு நாங்கள் போய் அங்கு ஏதாவது அசம்


பாவிதம் நடந்தால்; அப்படி நடக்குமென்றுதான் நான் நினைக்கிறேன்...கட்டுக் கடங்காமல் ஏதாவது நடந்தால் சுட்டுத்தள்ளுவதைத் தவிர வேறு வழியே இல்லை. ,அதற்கு நீங்கள் அனுமதி தந்திருக்கிறீர்கள். ஆனால் வேறு நாளாயிருந்தால் பரவாயில்லை. நாளைக்கு ஒன்றும் வேண்டாம். அது நமது புத்தசமயத்திற்கே இழுக்காகி விடும்....சர்வ தேச ரீதியாக நமது தேசத்தின் புகழுக்கு இழுக்கு வந்து விடும்...."

அவர் முடிக்குமுன்னர் பிரதமரே குறுக்கிட்டார்:

"நீர் சொல்வது சரிதான். மும்மணிகளை வழிபடுகிற ஒரு சரியான மனிதன் நீர். உண்மையான பௌத்தன். நீர் நாளை மறுநாளே உமது 'யூனிட்'டுடன் அங்கு போகலாம்...அது வரை பொலிஸே அங்கு தொடர்ந்து கடமையையாற்றவும். ஆனால், எஸ். பி., உம்முடைய பையன்களிடம் நாளை மட்டும் எக்காரணங் கொண்டும் துப்பக்கியை உபயோகிக்க வேண்டாம் என்று கண்டிப்பாகவே சொல்லிவிடும்... அது மிகவும் முக்கியமான விஷயம்."

*(1984)*

□□


செ.யோகநாதன்